REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2022 டிசம்பர் 13 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN
1932 - 2022

வரு. 90 இல. 294 | Tuesday 13, December, 2022 | 12 பக்கங்கள் | 50/-

MOBILE
TALK TEXT DATA BOOSTER 529
ஒரே பக்கேஜில் TALK TEXT DATA தேவையான BOOST செய்துகொள்ள
Voice 1777 நிமிடங்கள்
ஏனைய வலையமைப்பிற்கு 1000 நிமிடங்கள் + M2M 777 நிமிடங்கள்
Text 1777 sms
ஏனைய வலையமைப்பிற்கு 1000 SMS + M2M 777 SMS
Data 2GB anytime data
TRC/M/PRO/22/03
SLTMOBITEL

# யாழ் - சென்னை விமான சேவைகள் நேற்று முதல் ஆரம்பம்







## வாரத்தில் 4 சேவைகளை ஆரம்பித்தது அலையன்ஸ் நிறுவனம்

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய விமான சேவைகள் நேற்றைய தினம் திங்கட்கிழமை முதல் மீள ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இதன்படி அலையன்ஸ் எயார்லைன்ஸ் என்ற விமான சேவை நிறுவனம் சென்னையில் இருந்து பலாலிக்கு முதலாவது விமான சேவையை ஆரம்பித்தது. வாரமொன்றுக்கு இந்த விமான சேவை 04

பேராதனையில் முன்னாள் உபவேந்தர் மீதான தாக்குதல்;

## முழுமையான அறிக்கை சமர்ப்பிக்க ஜனாதிபதி ரணில் நேற்று உத்தரவு

### அறிக்கை கிடைத்ததும் அடுத்த கட்டமாக கடும் நடவடிக்கை



பேராதனை பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் மற்றும் பூகற்பவியல் பிரிவின் சிரேஷ்ட பேராசிரியர் அதுலசேனாரத்ன மற்றும் அவரது மகன் விதுர சேனாரத்ன ஆகியோரை தாக்கிய சம்பவம் தொடர்பாக முழுமையான அறிக்கையொன்றை தமக்கு பெற்றுத் தருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு நேற்று (12) ஆலோசனை வழங்கியுள்ளார்.

எதிர்காலத்தில் பல்கலைக்கழக பேராசிரியர்கள் இவ்வாறான சம்பவங்களுக்கு முகம் கொடுக்க இடமளிக்கக்கூடாது எனவும், படைகளின் பிராதனிகளுக்கு ஜனாதிபதி தெரிவித்துள்ளார். குறிப்பிட்ட தாக்குதல் தொடர்பாக முழுமையான அறிக்கைகள் கிடைத்த பின்னர் அது தொடர்பாக 04

## பத்திரிகை ஆசிரியர்கள் சங்க விருது வழங்கும் விழா இன்று

### சிறந்த ஊடகவியலாளர்களுக்கு விருதுகள்

இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம், இலங்கை பத்திரிகைப் பேரவையுடன் இணைந்து நடத்தும் 2021 ஆம் ஆண்டுக்கான அதி சிறந்த ஊடகவியலாளர்களுக்கு விருது வழங்கும் வைபவம் கல்கிஸ்ஸ மௌண்ட்லாவின்யா ஹோட்டலில் இன்று 13 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு நடைபெறுகிறது.

இலங்கையின் ஊடகவியல் துறையை மேம்படுத்தும் நோக்கில் சிறந்த ஊடகவியலாளர்களைத் தெரிவு செய்து கௌரவிக்கும் நிகழ்வு இம்முறை 23 வது தடவையாகவும் நடாத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சி;

## நேர்மையுடனேயே பேச்சுக்களை ஆரம்பிப்பதாக அரசு தெரிவிப்பு

### தமிழ் கட்சிகளுடனான பேச்சு குறித்து நீதியமைச்சர் கருத்து



அரசியல் தீர்வைக் காண வேண்டுமென்ற நேர்மையான நோக்கத்துடனேயே இந்த பேச்சுவார்த்தைகளை நாங்கள் முன்னெடுப்பதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார். சகல அரசியல் கட்சிகளுடனும் நல்லெண்ணத்தின் அடிப்படையிலேயே நாங்கள் இன்று (13) பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கின்றோம்.

மேலும், இனப்பிரச்சினை தீர்வு செயற்பாட்டில் இந்தியாவின் கரிசனையை புறக்கணிக்கவோ அல்லது இந்தியாவின் கரிசனையை குறைத்து மதிப்பிடவோ முடியாது. இந்த விடயத்தில் இந்தியாவின் ஒத்துழைப்பை நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என்றும் 04

ஆயுள் காப்புறுதியை உறுதி செய்ய கோரிக்கை;

## ஓய்வூதியம் பெறுவோருக்கு அரசு விசேட அறிவுறுத்தல்

### 2023 மார்ச் 31க்கு முன் பதியவும் வேண்டுகோள்

அடுத்த வருடம் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஆயுள் காப்புறுதி தரவு முறையை புதுப்பிக்காத ஓய்வூதியர்களின் ஓய்வூதியம் இடைநிறுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் ஜகத் டி. டயஸ் அனைத்து மாவட்ட மற்றும் 04

நாட்டின் பொருளாதார மந்த நிலையில்!

## மேலதிக கொடுப்பனவுகளை கொடுப்பது சாத்தியமற்றது



### தபால் ஊழியர் வேலை நிறுத்தம் குறித்து பந்துல

நாட்டின் பொருளாதார மந்த நிலையில் தபால் ஊழியர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகளை கொடுப்பது சாத்தியமற்றது என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். விடயதானத்துக்குப் பொறுப்பான 04



ஜேர்மன் 81 மில்லியன் ரூபாய் பெறுமதியான விசர் நாய்க் கடிக்கான தடுப்பூசி மருந்தை இலங்கைக்கு வழங்கியுள்ளது. இதனை ஜேர்மன் அரசின் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி அமைச்சின் (BMZ) கீழ் செயல்படும் GIZ Srilanka வேலை திட்டத்தின் பணிப்பாளர் (Nicolas Lamade) நிக்கலஸ் லமாடே, சுகாதார அமைச்சர் கலாநிதி கெஹெலிய ரம்புக்வெல்லவிடம் நேற்று (12) சுகாதார அமைச்சில் வைத்து கையளித்தபோது எடுக்கப்பட்ட படம்.



## எதிர்கால தேர்தல்களில் TNA கட்சிகள் தனித்தனியாக போட்டி

தீவிரமாக ஆராய்ந்து வருவதாக சுமந்திரன் MP தெரிவிப்பு 03



## போதைப் பொருட்களுடன் சுங்க பரிசோதகர்கள் கைது

கட்டுநாயக்க களஞ்சியசாலையில் பொலிஸார் அதிரடி 03

## முடிந்தால் தேர்தலில் என்னை தோற்கடித்து காட்டுங்கள்

### நாமல் ராஜபக்ஷ MP சவால் விடுப்பு



ராஜபக்ஷக்களை பழிவாங்க நாட்டை அழிக்காமல் அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு, முடிந்தால் தம்மை தோற்கடிக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பகிரங்க சவால் விடுத்துள்ளார்.

யூடியூப் பக்கம் ஒன்றின் நேர்காணலில் பங்குபற்றிய நாமல் ராஜபக்ஷ இதனை குறிப்பிட்டுள்ளார். 04

## இந்திய மத்தியஸ்தத்துடனேயே பேச்சை ஆரம்பிக்க வேண்டும்

### சி.வி விக்னேஸ்வரன் MP வலியுறுத்து



ஒற்றை ஆட்சியின் கீழான எந்த ஒரு தீர்வும் அர்த்தமுள்ள ஒரு தீர்வாக அமையாது என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும் என வலியுறுத்தியுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன், இந்தியாவின் மத்தியஸ்தத்துடன் இப்பேச்சுவார்த்தை இடம்பெற வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார். 04

## பாடசாலை விடுமுறை நாட்கள் குறைக்கப்படும்

### கல்வி அமைச்சு கவனம் செலுத்துகிறது



பாடசாலை விடுமுறை நாட்களைக்குறைப்பது தொடர்பில் கல்வி அமைச்சு கவனம் செலுத்தி வருகிறது. அடுத்த வருடம் பாடசாலை விடுமுறையைக் குறைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். 04

சுமார் 12 வருடகாலமாக மூடப்பட்டிருந்த

## திருக்கேதீஸ்வர ஆலயத்தை இந்தியாவே மீட்டெடுத்தது

### காசி தமிழ் சங்க விழாவில் ஜெய்சங்கர் தெரிவிப்பு



இலங்கையில் மன்னாரிலுள்ள ஆலயமொன்றின் மறுமலர்ச்சியில் இந்தியா ஆற்றிய பங்கை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் நினைவு கூர்ந்துள்ளார்.

இந்திய வாரணாசியின் காசி தமிழ்ச் சங்கத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற சமூகத்திலும் 04

## SJB யின் தலைவராக சஜித் மீண்டும் தெரிவு

### ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்



ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக சஜித் பிரேமதாச மீண்டும் தெரிவாகியுள்ளார். 04

போதைப்பொருள் வைத்திருந்த நிலையில்

## மட்டக்களப்பில் எட்டு நாட்களில் 16 பேர் கைது



மட்டக்களப்பு கொக்குவில், ஏறாவூர் பொலிஸ் பிரிவில் கடந்த 8 நாட்களில் போதைப்பொருட்களுடன் 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்துவதற்காக மட்டக்களப்பில் நியமிக்கப்பட்டுள்ள போதைப்பொருள் ஒழிப்பு 04

போதைக்கு அடிமையானோருக்கு

## பொலிஸார் ஆரம்பித்த புதிய வேலைத்திட்டம்



கொழும்பு வடக்குப் பிரிவில் போதைக்கு அடிமையானவர்களுக்கு சமூக ஆலோசனை வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா 04

## கஜ முத்துக்களை கடத்திய மூவர் கைது!

### அம்பாறை, பிபிலையில் சம்பவம்



அம்பாறை பிபிலையிலிருந்து மகாஓயாவிற்கு 5 கஜமுத்துக்களை முச்சக்கரவண்டி ஒன்றில் கடத்தி சென்ற 3 பேரை கைது செய்துள்ளதாக மகாஓயா பொலிஸார் தெரிவித்தனர். கடற்படை புலனாய்வு 04

## தலைவலி, உடல்வலி அறிகுறியா? பரவல் தீவிரம்

### மருத்துவ ஆலோசனைக்கு வலியுறுத்து

Ministry Of Health

காய்ச்சல், தலைவலி மற்றும் உடல்வலி போன்ற அறிகுறிகள் காணப்படுமாயின் உடனடியாக மருத்துவ 04

90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# இந்து சமய அறநெறி பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் கௌரவிப்பு



இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான தேசிய ஆக்கத் திறன் விருது, இந்து சமய அறநெறிப் பாடசாலைகள், ஆசிரியர்களுக்கான தேசிய மேன்மை விருது 2022 (2019) விருது வழங்கும் வைபவம் கடந்த 3ஆம் திகதி சனிக்கிழமை காலை கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் யதுகுலசிங் அனிருத்தனன் தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக புத்தசாசன மத மற்றும் கலாசார அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன, சிறப்பு அதிதியாக எஸ். தில்லைநடராசா, திருமதி சாந்தி நாவுக்கரசன், மற்றும் சுவாமி அக்ஷராத்மனாந்த மகராஜ், சர்வதேச இந்து மதபீட செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திரக்குருக்கள் பாபுசர்மா, உதவிப்பணிப்பாளர் ஹேமலோஜினி குமரன். நந்திக்கொடி சி. தனபாலா மற்றும் ஆலய அறங்காவலர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# 'ஸம்ஸம்' பௌண்டேசன் ஏற்பாட்டில் "School with a Smile" விசேட நிகழ்வு



ஸம்ஸம் பௌண்டேசனின் 2023 ஆம் ஆண்டிற்கான " School with a Smile " என்ற "தரமான கல்வியின் ஊடாக பெறுமதி அடிப்படையிலான சமூகம்" எனும் தொனிப்பொருளிலான நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் (11) ஆரம்பித்து வைக்கப்பட்டது. 'ஸம்ஸம்' அறக்கட்டளையின் தலைவர் முப்தி யூசுப் ஹனிபா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்தன பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்வில் மதப்பெரியார்கள் உட்பட அமைச்சர் அலி சப்ரி மற்றும் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர்.

படங்கள்: ருஸைக் பாரூக், அஷ்ரப் ஏ சமட்

# இராஜதந்திர கிரிக்கெட் போட்டி



தூதரக கிரிக்கெட் கமிட்டி இராஜதந்திர தூதரக அதிகாரிகள் மற்றும் ஐ.நா. முகவர் உறுப்பினர்களுக்கிடையில் தொடர்ச்சியாக நான்காவது வருடமாக மென் பந்து ஐந்து ஓவர்கள் கொண்ட இராஜதந்திர கிரிக்கெட் போட்டியை ராஜகிரிய சந்திரா சில்வா விளையாட்டு மைதானத்தில் (10) திட்டத் தலைவர் தென்னாப்பிரிக்க தூதரகத்தின் எம்.எஸ்.எம். ஷிராஜ் ஏற்பாட்டில் நடைபெற்றது. சிறந்த பந்து வீச்சாளர் வளைகுடா அணியைச் சேர்ந்த மொஹமட் அசீம் கௌரவ அதிதியாக கலந்து கொண்ட டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமரிடமிருந்து பரிசை பெற்றுக்கொண்டார். இறுதிப்போட்டியில் வளைகுடா அணி அமெரிக்க அணியை தோற்கடித்தது. வளைகுடா அணியின் தலைவர் சமன் புஷ்பகுமார சாம்பியன் கிண்ணம் மற்றும் 50,000 ரூபா ரொக்கப்பரிசையும் தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் எஸ். இ. ஷால்க் இடமிருந்து பெற்றுக்கொண்டார். ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தூதுவர் காலித் நாசர் அல் அமரி, ஆஸ்திரேலிய உயர் ஸ்தானிகர், பங்களாதேஷ் துணை உயர் ஸ்தானிகர், நேபாள் துணை உயர் ஸ்தானிகர், இந்திய துணை உயர் ஆணையர் மற்றும் போட்டியின் பிரதான அனுசரணையாளர் கிளாசிக் டிராவல்ஸ் பணிப்பாளர் சப்ரி பஹருடீன் மற்றும் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தர்கா நகர் தேசிய கல்வியியற் கல்லூரியில் மீலாத் விழா



தர்கா நகர் தேசிய கல்வியியற் கல்லூரி முஸ்லிம் மஜ்லிஸ் ஏற்பாட்டில் மீலாத் தின நிகழ்வு அண்மையில் கல்லூரியில் வெகு விமர்சையாக நடைபெற்றது. கல்லூரி பீடாதிபதி சதாசிவம் பவானந்தன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் பிரதேச கல்லூரிகளின் முக்கிய பிரமுகர்கள் அதிதிகளாக கலந்து சிறப்பித்ததோடு மாணவிகளின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. இறுதியில் வெற்றியீட்டியோருக்கு அதிதிகளினால் பரிசில்களும் வழங்கப்பட்டன.














## தினகரன் பிரதி செய்தியாசிரியர் லோரன்ஸ் செல்வநாயகத்தின் சகோதரர் காலமானார்



தினகரன் பத்திரிகையின் பிரதி செய்தியாசிரியரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான லோரன்ஸ் செல்வநாயகத்தின் சகோதரர் அலெக்சாண்டர் செல்வநாயகம் அவர்கள் நேற்று (12) திடீர் சுகவீனமுற்ற நிலையில் கொழும்பில் காலமானார்.

சிறந்த ஓவியரும் சமூக சேவையாளருமான அன்னார், இராயப்பன் செல்வநாயகம் ஞானப்பிரகாசம் அந்தோனியம்மாள் தம்பதிகளின் மூத்த புதல்வரும் தமிழ்ச்செல்வியின் அன்பு கணவரும், கிருஷாந்த் போல் அலெக்சாண்டர், சில்வெஸ்டர் அலெக்சாண்டர், திலீப் ரோய் அலெக்சாண்டர் ஆகியோரின் அன்புத் தந்தையும் லில்லி மேரி செல்வநாயகம், டெய்சி விக்டோரியா செல்வநாயகம், ரோஸி இன்பமலர் செல்வநாயகம் ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று மாலை 6 மணி முதல் இன்று பிற்பகல் 4 மணி வரை அஞ்சலிக்காக கொழும்பு, பொரளை, ஜயரத்ன மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இன்று பிற்பகல் 4 மணிக்கு கொழும்பு பொரளை கனத்தை பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

### பேராசிரியர் மீதான தாக்குதல் சம்பவம்:

## பேராதனை பல்கலைக்கழகத்தில் 12 மாணவர்களுக்கு வகுப்புத்தடை

**(எம்.ஏ.அமீனுல்லா)**



சிரேஷ்ட பேராசிரியர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பேராதனை பல்கலைக்கழகத்தில் 12 மாணவர்களுக்கு வகுப்புத்தடை செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களின் மாணவர் அந்தஸ்து இரத்து செய்யப்பட்டுள்ளது.

பேராதனை பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர், சிரேஷ்ட பேராசிரியர் அதுல சேனாரத்ன மற்றும் அவரது மகன் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களை தாக்கிய சம்பவம் மற்றும் உத்தியோகபூர்வ இல்லத்தை சேதப்படுத்திய சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழக மட்டத்தில் விசாரணைகளை ஆரம்பித்ததன் மூலம் 12 மாணவர்களின் மாணவர் அந்தஸ்து இரத்து செய்யப்பட்டுள்ளது என பேராதனை பல்கலைக்கழகத்தின் ஊடகப் பேச்சாளரும், பிரதி உபவேந்தருமான, பேராசிரியர் டெரன்ஸ் மதுஜித் தெரிவித்துள்ளார்.

இந்த 12 மாணவர்களும் கண்காணிப்பு கமரா அமைப்பை அவதானித்ததன் பின்னர் அடையாளம் காணப்பட்டதுடன், சம்பவம் தொடர்பான விசாரணைகள் நிறைவடையும் வரை இந்த மாணவர்களின் மாணவ அந்தஸ்தை இரத்து செய்யும் தீர்மானம் அமுலில் இருக்கும் எனவும் பிரதி உபவேந்தர் மேலும் குறிப்பிட்டார்.

04

### அநுராதபுரம் டிப்போ பஸ்;

## பொல்கஹவெலயில் அதிகாலை விபத்து

**திறப்பனை தினகரன் நிருபர்**

ஒவ்வொரு நாளும் அதிகாலை 2.15 க்கு அ/ நாச்சியாதீவிலிருந்து கொழும்பு நோக்கிச் செல்லும் இ.போ.ச அநுராதபுரம் டிப்போவுக்கு சொந்தமான பஸ் நேற்று (12 ) அதிகாலை 4.30 மணியளவில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

கொழும்பு நோக்கி சென்ற பஸ் பொல்கஹவெல பகுதியில் வைத்து பிறிதொரு பஸ் வண்டியுடன் மோதியே இவ் விபத்து சம்பவித்துள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

பஸ் வண்டி நடத்துனர் உட்பட பிரயாணிகள் பலர் காயமடைந்துள்ளதாக தெரிய வருகின்றது. உயிர்ச் சேதம் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை. ேற்படி விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## போதைப் பொருட்களுடன் சுங்க பரிசோதகர்கள் கைது

### கட்டுநாயக்கா களஞ்சியசாலையில் பொலிஸார் அதிரடி



கொக்கெய்ன், போதை கலந்த மாத்திரைகள் மற்றும் குஷ் என்ற போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்த சுங்க பரிசோதகர்கள் இருவரை பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பணியகத்தின் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கட்டுநாயக்க மற்றும் தனியார் களஞ்சியசாலைகளில் கடமையாற்றி வந்த சுங்க அதிகாரிகளே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். துறைமுகத்தில் சுங்க அதிகாரிகள் சிலர் போதைப் பொருள்வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸ்

04

## தேசிய மீலாத்தின ஞாபகார்த்த முத்திரை நாளை வெளியீடு

### பிரதம அதிதியாக அமைச்சர் அலி சப்ரி

**(அஜ்வாத் பாஸி, ஏ.எஸ்.எம். ஜாவித்)**



2022 தேசிய மீலாத் தினத்தை முன்னிட்டு ஞாபகார்த்த முத்திரை நாளை (14) புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு வைபவரீதியாக வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

கொழும்பு 10, தபால் திணைக்கள கேட்போர் கூடத்தில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் இப்றாஹிம் அன்ஸார் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி முத்திரை வெளியிடும் நிகழ்வில் பிரதம அதிதியாக வெளிவிகார அமைச்சர் அலி சப்ரி கலந்து

04

## எதிர்கால தேர்தல்களில் TNA கட்சிகள் தனித்தனியாக போட்டி

### தீவிரமாக ஆராய்ந்து வருவதாக சுமந்திரன் MP தெரிவிப்பு



தேர்தல்களில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் கட்சிகள் தனித்தனியாக முகம் கொடுப்பது தொடர்பில் தொழில்நுட்ப ரீதியில் ஆராயப்பட்டுள்ளது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடக பேச்சாளரும், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு கூட்டம் நேற்று முன்தினம் (11) வவுனியா, குடியிருப்பு கலாசார மண்டபத்தில் தமிழரசுக் கட்சி தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் நடைபெற்றது. அதன் பின் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது. தற்போது ஆரம்பமாகவுள்ளதாக கூறப்படும் அரசியல் அமைப்பு

04

### அக்கரப்பத்தனை தோட்டத்தில்

## விபத்தில் பலியான தொழிலாளிக்கு நஷ்டஈடு வழங்க கம்பனி இணக்கம்

### இ.தொ.கா வின் பேச்சுவார்த்தையில் முடிவு



அக்கரப்பத்தனை டொரிங்டன் தோட்டத்தில் ட்ரெக்டர் விபத்தில் உயிரிழந்த தொழிலாளியின் குடும்பத்துக்கு வீடு மற்றும் காணி சலுகைகளுடன் 30 இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க தோட்ட நிர்வாகம் நேற்று (12) இணக்கம் தெரிவித்துள்ளது.

இ.தொ.கா பொது செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் மற்றும் காங்கிரஸின் தவிசாளரும்,பாராளுமன்ற உறுப்பினருமான மருதுபாண்டி ராமேஸ்வரன் உள்ளிட்ட குழுவினர் தோட்ட நிர்வாகத்துடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையில் இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

கடந்த (05)ஆம் திகதி டொரிங்டன் தோட்ட தொழிற்சாலையிலிருந்து

04

### இந்திய பிரதமரின் பொருளாதார ஆலோசனை சபையில்;

## இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொடவுக்கு உரையாற்ற அழைப்பு




இந்திய பிரதமரின் பொருளாதார ஆலோசனை சபையில் உரையாற்ற வருமாறு இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொடவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்திய பிரதமரின் பொருளாதார ஆலோசனை சபையின் தலைவர் கலாநிதி பீபெக் டெப்ரோய் இந்த அழைப்பை விடுத்துள்ளதோடு வசதியான தினத்தில் பொருளாதார சபையில் உரையாற்ற சந்தர்ப்பத்தை பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். பிரதமரின் பொருளாதார ஆலோசனை சபை என்பது இந்திய அரசுக்கு விசேடமாக பிரதமருக்கு பொருளாதார மற்றும் அது தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாக ஆலோசனைகளை வழங்க அமைக்கப்பட்டுள்ள சுயாதீன நிறுவனம். மிலிந்த மொரகொடவும் பீபெக் டெப்ரோயும் அண்மையில் புது டில்லியில் அமைந்துள்ள இந்திய பிரதமரின்

04

## 125 மில். டொலர் பெறுமதியான மருந்துப் பொருட்கள் இறக்குமதி

### இந்திய கடன் திட்டத்தில் கிடைத்த உதவி



இந்திய கடன் திட்டத்தைப் பயன்படுத்தி 125 அமெரிக்க டொலர் பெறுமதியான மருந்துப் பொருட்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்தியாவசியப் பொருட்களின் கொள்வனவுக்காக இலங்கைக்கு 1 பில்லியன் டொலர் இந்திய கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்தது. இந்திய கடன் திட்டம் நடைமுறைக்கு வந்ததில் இருந்து ஒரு மாதத்திற்கு சராசரியாக 15 மில்லியன் டொலருக்கும் அதிகமான பெறுமதியுடைய மருந்துகள் தொடர்பான ஒப்பந்தங்களுக்கு அங்கீகாரமளிக்கப்பட்டுள்ளது.

இந்த கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற மருத்துவப் பொருட்களில் பல முக்கிய மருந்துகளும் உள்ளடங்குகின்றன. அம்மருந்துகளின் முன்னுரிமைகள் மற்றும் தேவைகளுக்கு ஏற்ப, இந்திய கடன் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படும் பொருட்களைத் தீர்மானிக்கும் உரிமையை இலங்கை கொண்டுள்ளது.

இந்த கடன்திட்டத்தின்கீழ் இம்முறை மருந்துகளுக்காக

04

### வெளிநாடு செல்லும்

## வீட்டு பணியாளர்களுக்கு தொழில் பாதுகாப்பு சட்டங்கள் அவசியம்

### வீட்டு வேலைத் தொழிலாளர் சங்கம் தெரிவிப்பு

**(அக்குணை குறுப் நிருபர்)**

வீட்டுப் பணியாளர்கள் தொடர்பாக தொழில் பாதுகாப்பு சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டால் ஓமான் பிரச்சினைகள் போன்றவை உருவாகாது என வீட்டு வேலைத் தொழிலாளர் சங்கம் தெரிவிக்கிறது.

கண்டியில் உள்ள அதன் தலைமையகத்தில் (11)இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது இவ்வாறு தெரிவித்த வீட்டு வேலைத் தொழிலாளர் சங்கத்தின் தலைவி திருமதி சத்யவானி சரசகோபால் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 12 ஆண்டுகளாக வீட்டுப் பணியாளர்களுக்காகக் குரல் எழுப்பிய போதும் முறையான சரியான சட்டப் பாதுகாப்புக்கள் இல்லாத காரணத்தால் ஓமான் நாட்டுப் பிரச்சினைகள் போன்றவை உருவாகியுள்ளன. அதற்கு முக்கிய காரணம் வீட்டுப் பணிப்பெண்களுக்குரிய சட்டப் பாதுகாப்புக்கள் இல்லாமையாகும்.

அவர்களில் அதிகமானோர் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட முகவர்கள் ஊடாகவே சென்றுள்ளனர், ஆனால் அங்கு சென்ற

04

## சீனன்கோட்டையில் இன்று ஷெய்க் அல் பாஸி நாயகத்தின் ஞாபகார்த்த நிகழ்வு

**(பேருவளை விசேட நிருபர் )**

ஷாதுலிய்யா தரீக்காவின் உலக ஆன்மீகத் தலைவர் மர்ஹூம் சங்கைக்குரிய ஷெய்கு ஸஜ்ஜாதா மர்ஹூம் கலாநிதி அஷ்ஷெய்ஹ் முஹம்மத் அல் பாஸி பின் அஷ்ஷெய்ஹ் முஹம்மத் இப்றாஹிம் அல் பாஸி அல் மக்கி. அஷ்ஷாதுலி (ரஹ்) அல் மக்கி அஷ்ஷாதுலி (ரஹ்) அவர்களின் 26 வருட ஞாபகர்த்த மஜ்லிஸ் நிகழ்ச்சிகள் இன்று 13 முதல் 22 ஆம் திகதி வரை சீனன் கோட்டை கங்கானம்கொட பளீல் ஹாஜியார் மாவத்தையில் உள்ள நூரானிய்யா ஸாவியா மஸ்ஜிதில் நடைபெறவுள்ளது.

கலீபதுஷ் ஷாதுலி மௌலவி அல் ஹாஜ் எம்.எம். ஸெய்னுல் ஆப்தீன் (பஹ்ஜி) தலைமையில் நடைபெறும் இம் மஜ்லிஸில் பிரபல பேச்சாளர் முஹம்மத் முஸ்தகீர் (அலவி) விஷேட சொற்பொழிவு நிகழ்த்துவார்.

இன்று அஸர் தொழுகையைத் தொடர்ந்து கத்தமுல் குர்ஆன் மஜ்லிஸூம் மஃரிப் தொழுகையைத் தொடர்ந்து வலீபா யாகூதிய்யா, ஹழரா (திக்ர்) மஜ்லிஸூம் இஷாத் தொழுகையின் பின்னர் மார்க்கச் சொற்பொழிவும் இடம் பெறும்.

கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம்.ஐ.எம் ரபீக் (பஹ்ஜி) உட்பட உலமாக்கள் சீனன் கோட்டை

04



பாணந்துறை, அம்பலந்துவை ஜனாஸா நலன்புரிச் சங்கம் நடாத்திய மீலாதுன் நபி விழா அண்மையில் பள்ளிவாசல் வளாகத்தில் நடைபெற்றது. இதில் அதிதிகளாக வருகை தந்த தொழில்நுட்ப கல்வித் திணைக்கள மேலதிக பணிப்பாளர் திரு. எம்.கே. முஹைஸ், களுத்துறை வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் எம்.ரீ.எம். இல்யாஸ், அல் அமீன் முஸ்லிம் வித்தியாலய அதிபர் எம்.ஏ.சீ. ஹாமீம், இல்மா முஸ்லிம் வித்தியாலய அதிபர் ரிஸ்மி மஹ்ரூப் , முன்னாள் கதீப் மௌலவி எம்.ஆர்.எம். யாசீன், பள்ளி பரிபாலன சபைத் தலைவர் அல் ஹாஜ் ஏ.எம்.சபியுதீன் உட்பட சங்கத்தின் தலைவர் மௌலவி பௌஸ், செயலாளர் இல்யாஸ் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

(படம்: மொறட்டுவை மத்திய விசேட நிருபர்)




## தேசிய மீலாத்தின... (03ஆம் பக்கத் தொடர்)

கொள்வார். இந்நிகழ்வில் அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட், இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள், நளீமிய்யா கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் மொஹமட் மற்றும் கல்விமான்கள், புத்திஜீவிகள் எனப் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். ஒவ்வொரு வருடமும் இடம் பெறும் தேசிய மீலாத் விழாவின்போது அரசாங்கம் முஸ்லிம் சமூகத்தினை கௌரவிக்கும் விதத்தில் முத்திரை ஒன்றை வெளியிடுவதற்கு அனுமதித்துள்ளது. அந்த வகையில் இம்முறை வெளியிடப்படும் முத்திரையில் ஜாமியா நளீமியா கலாபீடத்தின் முகப்புத் தோற்றம் பொறிக்கப்பட்டுள்ளது. இவ்வருட தேசிய மீலாத் விழா கடந்த ஒக்டோபர் மாதம் 09ஆம் திகதி பேருவளை ஜாமியா நளீமியா கலாபீட கேட்போர் கூடத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## சீனன்கோட்டையில் இன்று... (03ஆம் பக்கத் தொடர்)

பள்ளிச்சங்க தலைவர் ஏ.எச்.எம் முக்தார் ஹாஜியார் உட்பட உறுப்பினர்கள், நூரானிய்யா ஸாவியா மஸ்ஜித் நிர்வாகிகள், இஃவான்கள் நிகழ்வில் பங்குபற்றுவர்.

## இலங்கை உயர்ஸ்தானிகர்... (03ஆம் பக்கத் தொடர்)

ஆலோசனை சபை காரியாலயத்தில் சந்தித்த வேளையில் இரு நாடுகள் தொடர்பான முன்னேற்றம் குறித்து கவனம் செலுத்தினார்கள். உயர் ஸ்தானிகர் மிலிந்த இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையிலான பொருளாதார ஒருங்கிணைப்பின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டியதோடு அந் நடவடிக்கைக்காக ஆலோசனை சபைக்கு ஒத்துழைப்பு வழங்கக்கூடிய விதம் தொடர்பாக கேட்டறிந்தார். அதன் பலனாக பொருளாதார ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பு தொடர்பான விடயங்கள் தொடர்பில் ஆய்வுகளை நோக்கமாகக் கொண்டு வசதியான தினத்தில் சபையில் உரையாற்ற அதன் தலைவர் டெப்ரோய் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொடவுக்கு அழைப்பு விடுத்தார். கலாநிதி பீபெக் டெப்ரோய் சர்வதேச ரீதியாக புகழ்பெற்ற பொருளாதார நிபுணர் என்பதோடு அரசில் உயர் பதவிகள் பலவற்றை வகித்துள்ளார் .அவர் பகவத் கீதை உள்ளிட்ட பழமையான இந்திய நூல்கள் பலவற்றை மொழிபெயர்த்துள்ள திறமையான எழுத்தாளராவார். அவர் 2005 தொடக்கம் 2008 வரை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத்திட்டம் நியமித்த 'ஏழை மக்களின் சட்ட வலுவாக்கம்' தொடர்பான சர்வதேச ஆணைக் குழுவில் பணி புரிந்துள்ளார். உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொடவும் அதன அங்கத்தவராவார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## எதிர்கால தேர்தல்களில் TNA... (03ஆம் பக்கத் தொடர்)

விடயங்கள் கட்சியின் உடைய நிலைப்பாடு தொடர்பில் ஆராயப்பட்டது. அத்துடன் உள்ளூராட்சி மன்ற வட்டார எல்லைகள் மாற்றி அமைக்கப்பட்டமை தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

அரசியல் தீர்வு விடயத்தில் ஏற்கனவே தமிழ் தேசிய கட்சிகளோடு பேசி மூன்று விடயங்களை அரசாங்கத்திற்கு முன் வைத்துள்ளோம். தற்போது அபகரிக்கப்பட்டுள்ள காணிகளை அரசாங்கம் உடனடியாக விடுவிக்க வேண்டும், தொடர்ச்சியான நில ஆக்கிரமிப்புக்கள் நிறுத்தப்படவேண்டும், காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும்.

இரண்டாவதாக தற்போது அரசியலமைப்பிலும் சட்டங்களிலும் உள்ள அதிகார பகிர்வு விடயங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு மாகாணசபை தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

மூன்றவதாக வடக்கு , கிழக்கில் அர்த்தமுள்ள அதிகார பகிர்வு முறையில் சமஸ்டி கட்டமைப்பில் உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்ற 3 விடயங்களையும் சமாந்தரமாக முன்கொண்டு செல்வதென தீர்மானித்து அரசாங்கத்திற்கு முன் வைத்துள்ளோம். சில கால எல்லைகளுக்குள் இவை நடத்த வேண்டும் எனவும் அரசாங்கத்திற்கு சொல்லவுள்ளோம். அவற்றை ஏனைய கட்சிகளுடனும் பகிர்ந்து ஒற்றுமையான நிலைப்பாட்டை இந்த பேச்சுவார்த்தையின் போது எடுக்க தீர்மானித்துள்ளோம். தமிழ் தேசிய பிரச்சினைக்கான தீர்வு சம்பந்தமாக பாராளுமன்றத்தில் இருக்கும் கட்சிகளை ஜனாதிபதி பேச்சுக்கு அழைத்துள்ளார்.

## மட்டக்களப்பில் எட்டு...

*விசேட பொலிஸ் குழுவினரால் குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*பாடசாலைகளுக்கு அருகில் சைக்கிளில் தேன்குழல் விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் உள்ளிட்ட 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து, கஞ்சா, ஐஸ், ஹெரோயின் ஆகிய போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.*

## பேராதனை பல்கலைக்... (03ஆம் பக்கத் தொடர்)

பேராதனை பல்கலைக்கழகத்தில் நேற்று (12) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பேராசிரியர் இவ்விடயத்தை தெரிவித்தார்.

தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்ட மாணவர்களை அடையாளம் கண்டு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு பல்கலைக்கழக அதிகாரிகள், ஒழுக்காற்று அதிகாரி மற்றும் பாதுகாப்புபிரிவின் உறுப்பினர்கள் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்குவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் வன்முறை நடத்தை இதற்கு முன்னரும் நடந்திருந்தாலும் ஒரு பேராசிரியரையும் அவரது குடும்பத்தினரையும் இவ்வாறு தாக்கிய சந்தர்ப்பம் வேறு எப்பொழுதும் நடந்ததில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்களில் பெரும்பாலானோர் இணையவழி முறையின் மூலம் இரண்டு வருடங்கள் படித்த மாணவர்கள் என்பதால் அவர்களுக்கு பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகள் பற்றிய புரிதல் உள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

மேலும் தற்பொழுது பெருமளவிலான மாணவர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளதோடு மனநல சிகிச்சை முறைகளை அறிமுகப்படுத்துதல் உள்ளிட்ட பல திட்டங்களை பல்கலைக்கழகம் நடைமுறைப்படுத்தி வருகின்றது எனவும் மஹாபொல புலமைப்பரிசில் உதவிகளுக்கும் மேலாக சுமார் 700 பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு பேராதனைப் பல்கலைக்கழகம் உதவிகளை வழங்குவதாகவும் பிரதி உபவேந்தர் இதன்போது குறிப்பிட்டார்.

## 125 மில். டொலர்ன... (03ஆம் பக்கத் தொடர்)

மொத்தம் 20 மில்லியன் டொலர் இலங்கை அரசாங்கத்தால் குறிக்கப்பட்டுள்ளது.

1 பில்லியன் டொலர் கடன் திட்டத்தில் சுமார் 60% மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு இந்திய அதிகாரிகளால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்த அனுமதிகள் இலங்கையினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

## விபத்தில் பலியான... (03ஆம் பக்கத் தொடர்)

கல்மதுறை தோட்டத்திற்கு உரம் மூடைகளை ஏற்றி சென்ற டிரெக்டர் விபத்துக்குள்ளாகியதில் உர மூடைக்குள் சிக்குண்டு தொழிலாளர்கள் மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தனர். இத்தொழிலாளர்களில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான சங்குபிள்ளை கந்தையா (வயது 47) நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்த தொழிலாளிக்கு சவப்பெட்டி, மற்றும் மரணச் சடங்கு செலவு மாத்திரம் பொறுப்பேற்பதாக டொரிங்டன் தோட்ட நிர்வாகம் உயிரிழந்தவரின் குடும்பத்திடம் தெரிவித்துள்ளது.

ஆனால் தொழில் நிமிர்த்தம் விபத்தில் பாதிக்கப்பட்டு உயிரிழந்த தொழிலாளி மற்றும் சிகிச்சை பெற்று வரும் தொழிலாளர்களுக்கு தோட்ட நிர்வாகம் இழப்பீட்டு தொகை வழங்க வேண்டும் எனவும் இதற்கான நீதி கிடைக்கும் வரை தாம் பணிக்கு திரும்பப் போவதில்லை என டொரிங்டன்,ஸ்டார்,எல்பெபத்த ஆகிய தோட்டங்களின் தொழிலாளர்கள் நேற்று (12) காலை தொடக்கம் பணி பகிஷ்கரிப்பில் ஈடுப்பட்டனர்.

இவ்விடயம் தொடர்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமானின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டதையடுத்து நேற்று (12)) காலை அக்கரப்பத்தனை பிரதேசத்திற்கு திடீர் விஜயம் மேற்கொண்ட ஜீவன் தொண்டமான், டொரிங்டன் தோட்ட நிர்வாகத்துடன் கலந்துரையாடினார்.

இதன்போது உயிரிழந்த தொழிலாளியின் குடும்பத்திற்கு நஷ்ட ஈடாக 30 இலட்சம் பணமும்,வீடு வசதியில்லாத நிலைமை சுட்டிக்காட்டப்பட்டதால் தற்காலிகமாக தோட்டத்தில் உத்தியோகஸ்தர் விடுதி ஒன்றை மீள் புனரமைத்து தரவும், வாழ்வாதாரத்தை முன்னெடுத்து செல்ல தோட்ட தேயிலை காணியில் ஒரு பகுதியை குத்தகை அடிப்படையில் தோட்ட நிர்வாகம் வழங்கவும் உறுதியளித்துள்ளது. (ஆ.ரமேஸ்)

## பொலிஸார் ஆரம்பித்த புதிய...

*அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்தார்.*

*அந்த வேலைத்திட்டத்தின் ஊடாக குறித்த பிரிவில் போதைக்கு அடிமையான சுமார் 1200 பேருக்கு இது தொடர்பான சேவைகள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.*

*கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேல்மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் இந்த கருத்துகளை வெளியிட்டார்.*

## மேலதிக கொடுப்பனவுகளை ...

அமைச்சரவை அமைச்சரென்ற ரீதியில் அரசாங்கத்தின் சம்பளம் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவு நடைமுறைகளுக்கு எதிராக செயற்படும் திறன் தனக்கு இல்லையென்று வெகுஜன ஊடகம் மற்றும் போக்குவரத்து அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன நேற்று தெரிவித்துள்ளார்.

தபால் திணைக்கள ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்த போதிலும், பொருளாதாரம் மந்தமாக இருக்கும் இத் தருணத்தில் மேலதிக நேர கொடுப்பனவுகளை அதிகரிப்பது முற்றிலும் சாத்தியமற்றதென்றும் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன மேலும் தெரிவித்தார்.

தபால் திணைக்களம் சட்ட விரோத வேலைநிறுத்த போராட்டத்தை முன்னெடுப்பது தொடர்பாக அரசாங்க தகவல் திணைக்களத்தில் (12) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரச துறையில் சம்பளம், மேலதிக நேர கொடுப்பனவுகள், ஓய்வூதியம் என்பன இப்போது நாட்டுக்கு தாங்க முடியாத செலவை சுமத்தியுள்ளதாகவும், தற்போது அரச கடன் மற்றும் அரச ஊழியர்களின் சம்பளம், மேலதிக நேரம் மற்றும் ஓய்வூதியம் என்பனவற்றை செலுத்திய பின்னர், அரசை கொண்டு நடத்த போதுமான பணம் மிச்சம் இருக்காதென்றும் அமைச்சர் கூறினார்.

இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளத்திற்காக 1,002 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அரசாங்கத்தின் நிதிக் கொள்கைகள் காரணமாக இவ்வருடம் அரச சம்பள அதிகரிப்பு ஏற்படாதென இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும், வரி மூலம் பெறப்படும் வருமானம் மக்கள் மீது அதிக அழுத்தத்தையும் கொடுத்துள்ளது. தபால் திணைக்களத்தின் வருமானத்தை விட சம்பளம் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவுகளுக்காக அரசாங்கம் செலவிடுவதாகவும், வருடாந்தம் சுமார் 05 பில்லியன் ரூபா பொதுமக்களின் வரிப்பணத்தை தபால் திணைக்களத்துக்கு வழங்க அரசாங்கம் செயற்பட்டு வருவதாகவும் அதிக பணம் செலவழிக்க சாத்தியமில்லையெனவும் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

## முடிந்தால் தேர்தலில் என்னை...

ஒரு நாட்டின் ஜனநாயகத்திற்கு மதிப்பளித்து, அரசியலமைப்பின் பிரகாரம், தேர்தலில் நின்று மக்களின் வாக்கு மூலம் ஒரு நாட்டின் ஆட்சி அதிகாரத்தைப் பெற வேண்டும்.

அவ்வாறு செய்யாவிட்டால் போராட்டத்தின் மூலம் நாடு அராஜகம் செய்வதும் விடுதலை புலிகள் அமைப்பினால் நாட்டிற்கு ஏற்பட்ட பாதிப்பும் ஒன்றுதான்.

முழு உலகமும் கொவிட் தொற்றினால் உலகளாவிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி அந்த சவாலில் இருந்து மீள முயற்சிக்கும் வேளையில், சிலர் ஆட்சி அதிகாரத்தில் இருந்து எடுக்க முடியாத அராஜகத்தை ஏற்படுத்த முயற்சிப்பதாக நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

இலங்கைக்கு வரும் சுற்றுலா பயணிகளை தடுக்கும் போராட்டங்கள் யாருக்காக? என ஆர்ப்பாட்ட ஏற்பாட்டாளர்களிடம் நாமல் ராஜபக்ச கேள்வி எழுப்பினார்.

கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதி பதவியில் இருந்து விலகியதன் பின்னர் மாற்று வழியை முன்வைக்கத் தவறிய போராட்டக்காரர்கள், ஜனாதிபதிக்கு ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆணை இல்லை என கூறுகின்றார்கள்.

இதன் மூலம் அவர்களுக்கு அரசியலமைப்பு பற்றிய போதிய அறிவில்லை என்பது தெளிவாகியுள்ளதென தெரிவித்துள்ள நாமல் ராஜபக்ஷ,

அன்றிலிருந்து இன்று வரையிலும், எதிர்காலத்திலும் ராஜபக்சர்கள், இந்த நாட்டையும், பொது மக்களையும் மிகவும் நேசிப்பதாகவும், இதனை யாராலும் அல்லது எந்த சக்தியாலும் தடுக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இந்திய மத்தியஸ்தத்துடனேயே...

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தி குறிப்பில் சி.வி.விக்னேஸ்வரன் எம்.பி மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினை பற்றி கலந்துரையாடுவதற்காக 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சந்திப்பு ஒன்றுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

ஒற்றை ஆட்சியின் கீழான எந்த ஒரு தீர்வும் அர்த்தமுள்ள ஒரு தீர்வாக அமையாது என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும்.

ஏற்கனவே அரசியல் அமைப்பில் இருக்கின்ற 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த முடியாத நிலையில் இருக்கும் ஜனாதிபதி, அதிகாரப்பகிர்வு தொடர்பில் இந்த நாட்டில் நிரந்தர அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை ஆகியவற்றை ஏற்படுத்தும் வகையில் துணிச்சலானதும் சரியானதுமான ஒரு அணுகுமுறையை கையாள்வாரா என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லாத நிலையே இருக்கின்றது. ஆனால், எது எவ்வாறாக இருந்தாலும், பேச்சுவார்த்தைகளுக்கான ஒரு முன்னோடியான 13 ஆம் திகதி பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதும், இந்த பேச்சுவார்த்தையில் கீழ் வரும் சில அடிப்படையான விடயங்களை வலியுறுத்துவதும் அவசியம் என்று கருதுகின்றேன்.

1. அர்த்தமுள்ள ஒரு அதிகார பகிர்வுக்கான பேச்சுவார்த்தையை (ஐக்கிய இலங்கைக்குள் சமஸ்டி அல்லது கூட்டு சமஸ்டி என்பதே எமது நிலைப்பாடு) நாம் வரவேற்கின்றோம்.

2. பேச்சுவார்த்தைக்காக 3 ஆம் தரப்பு மத்தியஸ்தம் அவசியம் என்பதை கடந்த கால வரலாறு உணர்த்துகின்றது.

3. மத்தியஸ்தம் வகிப்பதற்கு இந்தியாவுக்கு அழைப்பு விடுவிக்கப்பட வேண்டும்.

4. பேச்சுவார்த்தை ஒரு கால வரையறைக்குள் பேசி முடிக்கப்பட வேண்டும்.

பேச்சுவார்த்தைக்கு முன்னதாக கடினமான நிபந்தனைகளை முன்வைத்து ஜனாதிபதியின் அழைப்பை நாம் கண்மூடித்தனமாக புறக்கணிப்பது பொறுப்புள்ள ஒரு செயலாக அமையாது.

அத்தகைய செயற்பாடு எமக்கான சர்வதேச ஆதரவினையும் பெற்றுத்தராது.

ஆனால், தீர்வு தொடர்பில் ஜனாதிபதி உண்மையான அக்கறையுடன் இருப்பாரானால், இந்திய மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு அவர் இணங்க வேண்டும்.

இதனை நான் 13 ஆம் திகதி சந்திப்பில் வலியுறுத்துவேன். இந்த பேச்சுவார்த்தையில் ஏனைய எல்லா தமிழ் அரசியல் கட்சிகளும் ஒருமித்து இந்த கருத்தை வலியுறுத்த வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பு என குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஓய்வூதியம் பெறுவோருக்கு அரசு...

*பிரதேச செயலாளர்களுக்கும் எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.*

*ஓய்வூதியம் பெறுவோரின் வாழ்க்கைச் சான்றிதழை எவ்வாறு சரிபார்க்க வேண்டும் என்பது குறித்து கிராம அதிகாரிகளுக்கு பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அறிவுறுத்தல் தொடர்பினை விடுத்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.*

*எனவே ஓய்வூதியம் பெறுவோர் கையொப்பமிட்ட படிவத்தை அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலாளரிடம் கையளிப்பதுடன், அந்தத் தகவலின் அடிப்படையில் ஓய்வூதிய உத்தியோகத்தர்கள் தரவு அமைப்பை புதுப்பிக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.*

*வாழ்நாள் சான்றிதழை உறுதி செய்ய கையொப்பமிடாத ஓய்வூதியர்களின் பதிவேட்டை பெப்ரவரி 20ஆம் திகதி சம்பந்தப்பட்ட கிராம அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும், கிராம உத்தியோகத்தர்கள் உரிய ஆவணத்தை பூர்த்தி செய்து பிரதேச செயலாளரிடம் மார்ச் 31 ஆம் திகதிக்குள் ஒப்படைக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*அதேவேளை கைரேகை மூலம் ஆயுள் சான்றிதழை சரிபார்க்கக்கூடிய 476 பொது மற்றும் தனியார் வங்கிக் கிளைகள் மற்றும் 26 பிராந்திய அலுவலகங்களின் பட்டியலை ஓய்வூதியத் திணைக்களத்தின் இணையத்தளத்திற்குச் சென்று பெற்றுக்கொள்ள முடியும் என்றும் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.*

*குருமார்கள் தொடர்பான வாழ்க்கைச் சான்றிதழ்களைப் பெறும் போது, கிராம அலுவலர், துறவி அல்லது துறவி வசிக்கும் கோயில்/மடம்/காடுகளுக்குச் சென்று வாழ்க்கைச் சான்றிதழைப் பெற வேண்டும் என் றும் ஊனமுற்றோ அல்லது முதியோர் இல்லங்களிலோ வாழும் ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் அனாதைகளின் வாழ்க்கைச் சான்றிதழ்களை வீட்டுக்குச் சென்று சரிபார்த்து உறுதிப்படுத்த வேண்டும்.*

*இதேவேளை, ஓய்வூதியம் பெறுவோர் 2023ஆம் ஆண்டுக்கான வாழ்க்கைச் சான்றிதழைப் பெறுவதற்குத் தேவையான படிவங்களின் செலவுகளை நிர்வகிப்பதற்காக இந்த முறைமை மாற்றப்பட்டுள்ளதாகவும் சம்பளப் பணிப்பாளர் நாயகம் ஜகத் டி. டயஸ் தெரிவித்துள்ளதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

## வீட்டு பணியாளர்களுக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

பின்னர் முறைகேடுகள் ஏற்பட்டுள்ளன.

பொருளாதாரச் பிரச்சினைகள், முறையான சம்பளம் இன்மை, மற்றும் சட்ட உத்தரவாதம் இன்மை போன்ற பல காரணங்களால் தற்காலிக விசாவில் வீட்டு வேலைத் தொழிலுக்காக வெளிநாடு செல்கின்றனர். அப்படி வெளிநாடுகளுக்குச் சென்ற பலர் இன்னல்களுக்கு ஆளாகியுள்ளனர்.

வீட்டு வேலைப் பணியில் ஈடுபடுவோருக்கு தொழில் பாதுகாப்பு சட்டம் நம் நாட்டில் இருந்திருந்தால், இது போன்ற பிரச்னைகள் ஏற்பட்டிருக்காது. வீட்டு வேலைப் பணிக்காக வெளி நாடுகளுக்குச் சென்று சடலமாக திரும்பி வந்த சம்பவங்களும் உள்ளன.

சிலர் காணாமல் ஆக்கப்பட்ட நிலைமைகளும் உண்டு. எனவே உள் நாடு மற்றும் வெளி நாடுகளில் பணிபுரியும் இலங்கை வீட்டுப் பணியாளர்களுக்கும் உரிய சட்டப் பாதுகாப்பை வழங்குமாறு ஒரு சங்கம் என்ற ரீதியில் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம் என்றார்.

## போதைப் பொருட்களுடன்... (03ஆம் பக்கத் தொடர்)

போதைப் பொருள் தடுப்பு பணியகத்திற்கு தகவல் கிடைத்துள்ளது. இதனையடுத்து ஒரு சுங்க பரிசோதகர் துறைமுகத்தில் இருந்து வெளியேறும் போது நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சுங்க பரிசோதகர் வசம் போதைப் கலந்த முத்திரைகள் இருந்துள்ளதுடன் அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளை அடுத்து அவருக்கு இந்த போதைப் பொருளை வழங்கிய மற்றைய சுங்க பரிசோதகர் கைது செய்யப்பட்டுள்ளார்.

துறைமுகத்தில் ஒரு அறையில் வைத்து கைது செய்யப்பட்ட இந்த சந்தேக நபரிடம் இருந்து குஷ் என்ற போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. இவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளை அடுத்து அவர் காருக்குள் மறைத்து வைத்திருந்த கொக்கெய்ன் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அறையில் காணப்பட்ட நிலையில் வெற்று அஞ்சல் பொதிகள் மூன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் அஞ்சல் பரிமாற்றம் செய்யும் மத்திய நிலையத்திற்கு வரும் போதைப் பொருள் அடங்கிய பொதிகளை பெற்று அவற்றை போதைப் பொருள் விற்பனையாளர்களுக்கு விநியோகித்து வந்துள்ளதுடன் போதைப் பொருள் விற்பனையிலும் ஈடுபட்டு வந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளதுடன் பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பணியக அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பாடசாலை விடுமுறை...

*சராசரியாக ஒரு வருடத்தில் பாடசாலைகள் நடத்தப்பட வேண்டிய நாட்கள் 210 என்றும் அவர் குறிப்பிட்டார். அதற்கான வேலைத் திட்டம் தயாரிக்கப்படும். அடுத்த வருடம் டிசம்பர் மாதத்துக்குள் அனைத்து தரங்களுக்குமான பாடத் திட்டங்களையும் உள்ளடக்குவதே இதன் இலக்காகும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.*

## நேர்மையுடனேயே பேச்சுக்களை ...

*விஜயதாச ராஜபக்ஷ குறிப்பிட்டார்.*

*இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று சகல அரசியல்கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்திருக்கிறார். பேச்சுவார்த்தையில் சகல அரசியல் கட்சிகளுக்கும் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதென நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.*

## முழுமையான அறிக்கை சமர்ப்பிக்க...

*எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் முடிவெடுக்கப்படும் என ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார் .*

*பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் சிலரின் தாக்குதல்களுக்கு உள்ளானதாக கூறப்படும் அப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் அதுல சேனாரத்ன மற்றும் அவரது மகன் விதுர சேனாரத்ன ஆகியோர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

## தலைவலி, உடல்வலி அறிகுறியா?...

*ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுமாறு சுகாதார பிரிவினர் பொதுமக்களிடம் கோரியுள்ளனர்.*

*இந்த நாட்களில் மழையுடனான காலநிலை நிலவுவதன் காரணமாக டெங்கு உள்ளிட்ட வைரஸ் காய்ச்சல் பரவல் அதிகரித்துவருவதாக தெரிவிக்கப்படுகிறது.*

*நாடு முழுவதும் இந்த வாரத்திற்குள் மாத்திரம் ஆயிரத்து 700 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.*

*இந்தநிலையில், இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 71 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.*

## SJB யின் தலைவராக சஜித்...

*ஐக்கிய மக்கள் சக்தியின் வருடாந்த மாநாடு நேற்று முன்தினம் பொரளை கெம்பல் மைதானத்தில் இடம்பெற்றதுடன், குறித்த மாநாட்டில் அவர் ஏகமனதாக தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.*

*எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் வருடாந்த மாநாடு நடைபெற்றது. இதற்காக, கொழும்பு பொரளை மற்றும் தெமட்டகொடை ஆகிய பகுதிகளில் இருந்து ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் பேரணியாக கெம்பல் மைதானத்தை நோக்கி சென்றிருந்தனர்.*

*இந்த மாநாட்டில், ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள் பலரும் பங்கேற்றிருந்தனர். இதன்போது கருத்துரைத்த எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐக்கிய மக்கள் சக்தியினை அழிப்பதற்கான சூழ்ச்சி இடம்பெறுவதாக குறிப்பிட்டார்.*

## யாழ் – சென்னை விமான ...

*நிறுவனத்தினால் நான்கு சேவைகள் நடத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.*

*அத்துடன் பயணியொருவர் 20 கிலோ வரை பொருட்களை விமானத்தில் எடுத்துச்செல்லமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இன்றைய நிகழ்வில் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ, வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, யாழ் இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நடராஜ் உட்பட யாழ் மாவட்ட செயலாளர் கணபதிப்பிள்ளை மகேஷன், விமான நிலைய உயர் அதிகாரிகள், முக்கிய அரசியல் பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.*

*கடந்த ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச விமான நிலையப் பணிகள் கடந்த காலங்களில் இடைநிறுத்தப்பட்டிருந்தன. இந்நிலையில் மீண்டும் விமான சேவை ஆரம்பமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

## கஜ முத்துக்களை...

*பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து சம்பவதினமான நேற்று முன்தினம் (11) மாலை மகாஓயா இலங்கை வங்கிக்கு அருகில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.*

*இதன்போது, பிபிலையில் இருந்து கஜமுத்துக்களை வியாபாரத்துக்காக மகாஓயாவிற்கு கடத்தி சென்ற முச்சக்கரவண்டியை கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த விசேட அதிரடிப்படையினர் இடைமறித்து சோதனையிட்ட போது அதில் 5 கஜமுத்துக்களுடன் 3 பேரை கைது செய்துள்ளனர்.*

*இதில் கைது செய்யப்பட்டவர்கள் பிபிலையைச் சேர்ந்த 53,34 மற்றும் 36 வயதுடையவர்களாவர்.*

*மீட்கப்பட்ட கஜமுத்துக்கள் மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்திய முச்சக்கரவண்டி ஆகியன மகாஓயா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.*

## திருக்கேதீஸ்வர ஆலயத்தை...

*தேசத்தைக் கட்டியெழுப்புவதில் ஆலயங்களின் பங்களிப்பு என்ற தலைப்பில் உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.*

*இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில், 12 வருடங்களாக மூடப்பட்டிருந்த மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தை இந்தியாவே மீட்டெடுத்தது.*

*எனவே நாங்கள் ஆர்வம் காட்டி முயற்சி செய்ததால், அந்த ஆலயத்தின் மறுமலர்ச்சி சாத்தியமாகியுள்ளது.*

*சிவபெருமானுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஐந்து புனித ஈஸ்வரங்களில் ஒன்றான திருக்கேதீஸ்வரம் துணைக்கண்டம் முழுவதும் உள்ள சைவர்களால் வணங்கப்படுகிறது. மேலும் இந்த ஆலயம் இலங்கை வரலாற்றில் மிகவும் கடினமான காலகட்டத்திற்கு சாட்சியமாக இருந்தது.*

*இது ஆயுதப் போரின் போது 12 ஆண்டுகளாக மூடப்பட்டு மீண்டும் 2002இல் திறக்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.*

# திருவருகைக்காலமும் அர்த்தம் தரும் மெழுகுவர்த்திகளும்

திருவருகைக் காலத்தின் மூன்றாவது வாரத்தில் காலடி எடுத்து வைக்கின்றோம். இக்காலம், அன்பின் காலம், மகிழ்ச்சியின் காலம், ஈகையின் காலமுமாகும்.

இறை மகனின் வருகைக்காக நம்மை தயார் செய்கின்ற இந்தக் காலம் விழித்திருந்து நம் மீட்பரை சந்திக்க நம்மை அழைக்கின்ற காலம்.



இருளின் பிடியில் இருந்தும் அடிமையின் பிடியில் இருந்தும் அழிவில் இருந்தும் துன்பத்தில் இருந்தும் காத்துக்கொள்ள இறைமகனை சந்திப்பதற்காக அவரை நம் உள்ளத்தில் ஏற்று அவரையே அணிந்து கொள்ள அழைக்கும் அன்பின் காலம் இது.

இஸ்ராயேல் மக்கள் மெசியாவின் வருகைக்காக காத்திருந்தது போல நாமும் காத்திருப்போம். விளக்குகளுடன் அன்று இயேசு மொழிந்த பத்து தோழியர் உவமையில் அக்கன்னியர் காத்திருந்தனர். அவர்களைப் போல நாமும் விளக்குகளை ஏற்றி இறைமகனின் வருகைக்காக நம்மைத் தயார் செய்வோம்.

முதல் வாரம் எதிர்நோக்கின் மெழுகுவர்த்தி. இது மீட்பரின் வருகைக்காக காத்திருந்த நம் முதுபெரும் தந்தையர்களான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரைக் குறிக்கின்றது.



இரண்டாம் வாரம். அமைதியின் மெழுகுவர்த்தி. மீட்பரின் வருகை, வரும் காலம், அவரின் இயல்புகள் போன்ற அனைத்து செய்திகளையும் தந்த இறைவாக்கினர்களான ஏசாயா, எரேமியா, தானியேல் போன்றோரை குறிக்கின்றது.

"மனம் மாறுங்கள், ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்து விட்டது" என்ன மத்தேயு நற்செய்தி தெரிவிப்பது போன்று

இறைவாக்கினர்கள் அனைவரும் மீட்பரின் வருகைக்காக நாம் எவ்வகை தயாரிப்புக்களை மேற்கொள்ள வேண்டும் என எடுத்துரைத்துள்ளனர்.

மூன்றாம் வாரம் மகிழ்ச்சியின் மெழுகுவர்த்தி. இது மீட்பரின் முன்னோடியான புனித திருமுழுக்கு யோவானை குறிக்கின்றது.

"பாலைநிலத்தில் குரல் ஒன்று முழங்குகிறது. ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாகுங்கள்; அவருக்காக பாதையை செம்மையாக்குங்கள். பள்ளத்தாக்குகள் எல்லாம் நிரப்பபடும். மலை, குன்று யாவும் தாழ்த்தப்படும். கோணலானவை நேராக்கப்படும். கரடுமுரடானவை சம தளமாக்கப்படும். மனிதர் அனைவரும் கடவுள் அருளும் மீட்பை காண்பர்" (லூக்கா: 3: 46).

நாம் மீட்பின் காலத்தை நெருங்கிவிட்டோம். திருமகன் கிறிஸ்துவை அறச்செயல்கள் நிறைந்த வாழ்வினால் சந்திக்க ஆவலுடன் காத்திருக்கின்றோமா? அவர் வரும்போது அவரது வலப்பக்கம் நிற்கவும், விண்ணரசை அடையவும் ஏற்புடையவர்களாவோம்.




# அமைதியின் தூதுவர்களாவோம்

இரக்கத்தின் ஆண்டவர் நம் மத்தியில் பிறக்கப் போவதை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம்.

மனிதனுக்கு சாதாரணமாக நான்கு வகையிலே துன்பம் வரலாம்: நோயினால். பாவத்தால் மரணத்தால் இயற்கையினால். ஆண்டவர் ஒவ்வொரு மனிதர்களின் மனநிலையை உணர்ந்தவராய் நான்கு துயரங்களிலிருந்தும் மனிதர்களை விடுவித்து அவர்களுக்கு மகிழ்ச்சியும், மனநிம்மதியும் நிறைந்த வாழ்க்கையைப் பரிசாக அளிக்கின்றார்.

கடந்த ஞாயிறு நற்செய்தியில் கூறப்பட்ட இருவரும் பார்வையற்றோர். அவர்கள் ஆண்டவராம் இயேசுவுக்காகக் காத்திருந்தார்கள்!

இயேசு அவர்கள் இருந்த பக்கம் நடந்து செல்கிறார் என்பதை எப்படியோ உணர்ந்து கொண்டார்கள். கத்தினார்கள்: "தாவீதின் மகனே, எங்களுக்கு இரங்கும்" என்றனர்! (மத.9:2731)

அவர் அவர்களை அன்போடு பார்த்து, ஆதரவு நிறைந்த இதயத்தோடு அவர்களைத் தொட்டார். தொட்டவுடன் அவர்கள் குணமானார்கள்.

மற்றொரு சம்பவத்தில் இருவர் இயேசுவின் பக்கத்தில் சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தனர். இருவரும் குற்றவாளிகள். ஒருவன் கேலி செய்தான். மற்றொருவனோ இயேசுவின் இரக்கத்தைக் கேட்டான்.

திருடித் திருடிப் பழக்கப்பட்டவன் இறுதியாக இயேசுவின் இதயத்தையும் திருடிவிட்டான். இயேசு அவனைப் பார்த்து, "நீ இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்" (லூக்.23:43) என்றார். "நான்கு நாட்கள் கல்லறையிலிருந்த

கைகள் திடப்படுத்தப்பட்டன தள்ளாடிய முழங்கால்கள் உறுதிப்படுத்தப்பட்டன. உள்ளத்தில் உறுதி அற்றவர்களுக்கு இலாசரை உயிர்ப்பித்து கட்டுகளை அவிழ்த்து அவனைப் போகவிடுங்கள்" (யோவா. 11:144) என்றார்.

"இரையாதே, அமைதியாயிரு" என்றார். காற்றும், கடலும் அவருக்குக் கீழ்ப்படிந்தன (மாற். 4:35 41).

இதோ இந்த இரக்கத்தின் ஆண்டவர் இயேசுதான் நம் நடுவே பிறக்கப் போகிறார்.நமக்கெல்லாம் மகிழ்ச்சி பொங்கும் காலமிது. இயேசு காலடி பட்ட இடமெல்லாம் பாலைவனம் சோலை வனமானது; பொட்டல் நிலம் பூத்துக் குலுங்கியது; தளர்ந்து போனவர்களுக்கு இயேசு உறுதியளித்தார்.

அநீதியினின்று மக்களைக் காப்பாற்றினார். கண்களுக்குப் பார்வையையும், செவிகளுக்குக் கேட்கும் ஆற்றலையும், நாவிற்குப் பேசும் வரத்தையும் முடவருக்கு நடக்கும் சக்தியையும் தந்து எல்லாரும் நலமுடன் வாழ வழி வகுத்தார்.



ஆண்டவரால் விடுவிக்கப்பட்டோர் திரும்பி வருவர். மகிழ்ந்து பாடிக்கொண்டே (எசா. 35:10) சீயோனுக்கு வருவர் .

. திருமுழுக்கு யோவான், மெசியா யார் என்பதை அறிந்துகொள்ள இயேசுவிடம் தன் சீடர்களை அனுப்புகிறார். தம்மிடம் வந்த சீடர்களிடம், நீங்கள் கண்டதையும், கேட்டதையும் யோவானிடம் அறிவியுங்கள். குருடர் பார்க்கின்றனர். முடவர் நடக்கிறார். நோயாளி குணமடைகிறான் என்றார் இயேசு.

இயேசுவின் பணி திருமுழுக்கு யோவானுக்கு நிறைவும் மகிழ்வும் தருகிறது. இந்த மனநிலை நம்மில் இருந்தால் எவ்விதத் தடையுமின்றி பல நல்ல செயல்கள் நடந்தேறும் என்பதில் சந்தேகமில்லை.

யோவான் முன்னோடியாக வந்து இயேசுவின் பாதையை செம்மைப்படுத்தியது போல நாமும் இயேசுவின் முன்னோடியாக, சான்று பகர்ந்து நற்செய்தி நம்மை அழைக்கிறது.

நாம் பாவம் என்ற குருட்டுத் தன்மையிலிருந்து விடுபட்டு இயேசுவின் மீது நம்பிக்கை கொள்வோம். நாம் பெற்றுக் கொண்ட மீட்பை, அமைதியை மற்றவருக்கு எடுத்துச் சொல்லும் தூதுவர்களாகச் செயல்படுவோம்.

ஒரு சிற்பியானவன் ஒரு கல்லில் சிலை வடிக்க தொடங்கினான். அது உடைந்தது. அடுத்த கல்லை செதுக்கினான். அதுவும் உடைந்தது, மூன்றாவது கல்லை விடா முயற்சியோடு செதுக்கினான்.

அழகான சிலை உருவானது. உடைந்த கற்கள் ஆலயத்தின் படிக்கற்களாக மாறின. உருவாக்கப்பட்ட சிலையானது வழிபடும் சிலையானது. ஆம்! நாம் நம்பிக்கையோடும், மன உறுதியோடும் செயல்பட்டால் வெற்றி நமதே.

அருட் தந்தை ம.அருள்...

# பாலன் இயேசு திருவுருவங்களை திருத்தந்தை ஆசீர்வதிப்பு



திருவருகைக் காலம், ஆண்டவரை புதிய வழிகளில் அறிவதற்கு ஏற்றது.

சிறார் தங்கள் வீட்டுக் குடில்களில் வைப்பதற்காகக் தயாரித்திருந்த பாலன் இயேசு திருவுருவங்களை ஆசிர்வதித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கடவுள் எவ்வாறு இருக்கவேண்டும் என்ற நம் கற்பனையைக் கடந்தவராக அவர் எப்போதும் மகத்தானவராக இருக்கிறார் மற்றும், அவர் பற்றிய நம் கணிப்புகளைவிட அவரின் செயல்கள் நம்மை எப்போதும் வியப்படைய வைக்கின்றன என்றார் திருத்தந்தை.

வத்திக்கானின் புனித பேதுரு வளாகத்தில் கூடியிருந்த பெருமளவான திருப்பயணிகளை, குறிப்பாக, சிறுவர்களோடு வந்திருந்த குடும்பங்களை வரவேற்ற திருத்தந்தை, அச்சிறார்கள் தங்கள் வீட்டுக் குடில்களில் வைப்பதற்காகக் கொண்டு வந்திருந்த பாலன் இயேசு திருவுருவங்களை ஆசிர்வதித்தார்.

இந்தப் பழக்கமானது, ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்குமுன் திருத்தந்தை புனித ஆறாம் பவுல் அவர்களால் தொடங்கப்பட்டது.

கடவுளின் செயல்கள் வித்தியாசமானவை என்றும், அவை நம் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புக்களையும் விட மேலானவை என்பதால், அவரைத் தேடுவதையும், அவரது திருமுன் உண்மையாகவே மனம்மாறுவதையும் ஒருபோதும் நிறுத்திவிடக் கூடாது என்றும் திருத்தந்தை தெரிவித்தார்.

கிறிஸ்மஸ் தினத்துக்கு தயாராகிவரும் நாம், நம் மத்தியில் வாழ வந்த கடவுளின் மகிமையான குழந்தை இயேசுவின் எளிமையை அறிந்துகொள்ள அன்னை மரியாளின் பரிந்துரையை வேண்டுவோம் என்றுரைத்தார் திருத்தந்தை.

கிறிஸ்தவ நம்பிக்கை மற்றும், நற்செய்தியின் மகிழ்வுக்கு மனத்தாராளமாகச் சான்றுபகர அருளாளர் கள் இளையோருக்குத் தூண்டுதலாக இருப்பாராக என்றும் திருத்தந்தை குறிப்பிட்டார்.

மேரி தெரேசா...

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 27ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஜுமாதல் ஊலா பிறை 18



குறள் தரும் சிந்தனை

குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு

பழிவந்து சேரக் கூடாது என்ற அச்ச உணர்வுடன் நடக்கும் பண்பார்ந்த குடியில் பிறந்தவருடைய நட்பை எந்த வகையிலாவது பெற்றிருப்பது பெரும் சிறப்புக்குரியதாகும்

# பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் வன்முறை சுபாவம்!

பல்கலைக்கழகம் என்பது கற்றறிந்த பண்பாளர்களையும், நல்லொழுக்கம் நிறைந்தவர்களையும், நாட்டுக்கும் சமூக மேம்பாட்டுக்கு பங்களிக்கக் கூடியவர்களையும் உருவாக்கக்கூடிய இடமாகப் பாரக்கப்படுவது வழமையாகும். அங்கிருந்து வெளியேறுபவர்கள் நாட்டையும் மக்களையும் கட்டியெழுப்புவதற்கு ஆக்கபூர்வமாகப் பங்களிக்க வேண்டியவர்களாவர். அதற்கான பொறுப்பும் கடமையும் அவர்களுக்கு உள்ளன.

எந்தவொரு நாட்டினதும் சமூக பொருளாதார, கலாசார முன்னேற்றத்திற்கு பங்களிப்பவர்களில் முன்னணியில் திகழ வேண்டியவர்கள் பல்கலைக்கழகங்களில் கற்று வெளியேறுபவர்களாவர்.

இருந்த போதிலும், இந்நாட்டு பல்கலைக்கழக மாணவர்கள் பகிடிவதை என்ற பெயரிலும் ஆர்ப்பாட்டம், ஊர்வலம் என்ற பெயரிலும் அண்மைக் காலமாக முன்னெடுக்கும் செயற்பாடுகள் பெரும்பாலும் உரிமை மீறல்களாகவும், வன்முறை வெளிப்பாடுகளாகவும் அமைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இந்நாட்டு பல்கலைக்கழகங்களில் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்ட பகிடிவதைச் சம்பவங்களின் போது சிலர் உயிரிழந்துள்ளனர். பலர் உடல், உள காயங்களுக்கு உள்ளாகியும் உள்ளனர். இது பகிடிவதையினது குரூரத்தன்மையின் வெளிப்பாடாகும்.

அதன் காரணத்தினால் பகிடிவதையைக் கட்டுப்படுத்தும் நோக்கிலான நடவடிக்கைகள் கடுமைப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக இந்நாட்டு சட்டப்படி பகிடிவதை ஒரு குற்றச்செயலாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு பல்கலைக்கழகத்திற்கு புதிதாக நுழைவைப் பெறும் ஒவ்வொரு மாணவரும் தாம் பகிடிவதைக்கு துணைபுரியவோ, அதில் ஈடுபடவோ மாட்டேன்' என்று உறுதி அளிக்கக் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர்.

இருந்த போதிலும் பகிடிவதை இடம்பெறவே செய்கிறது. இது பலரது அவதானத்தைப் பெற்றுள்ள ஒன்றாகவும் விளங்குகிறது. இவ்வாறான நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 'வரவு செலவுத்திட்டமும் நாட்டின் எதிர்காலமும்' என்ற தொனிப்பொருளில் அண்மையில் ஆற்றியுள்ள உரையொன்றில், 'பல்கலைக்கழகங்களில் பகிடிவதையை ஒழிக்கவென கடுமையான சட்டங்களை உடன் அமுல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளதோடு, 'பகிடிவதை என்பது ஒரு உரிமை அல்ல' என்றும் 'பல்கலைக்கழகங்களுக்கு வரும் மாணவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பு' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதுதான் உண்மை. இந்நாட்டில் பகிடிவகை கடந்த சில தசாப்தங்களாக மிகவும் மோசமான வடிவத்தைப் பெற்றுள்ளது. பல்கலைக்கழகங்களுக்கு புதிதாகப் பிரவேசிக்கும் மாணவர்களை உடல், உள ரீதியில் கடுமையாகக் காயப்படுத்தக் கூடியனவாக பகிடிவதைகள் அமைந்துள்ளன. அதன் காரணத்தினால் பகிடிவதையைக் கட்டுப்படுத்துவதற்கு கடுமையான நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற வலியுறுத்தல்களும் பரவலாக விடுக்கப்படுகின்றன. அதன் அவசியமும் உணரப்பட்டுள்ளது.

இவை இவ்வாறிருக்க, பலவித கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த காலத்தில் முன்னெடுத்த ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும் கூட வன்முறை வடிவத்தையே பெரும்பாலும் பெற்றுள்ளன.

அந்த வகையில் கடந்த 10 ஆம் திகதி பேராதனை பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அத்துல சேனாரத்னவின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்திற்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல்கலைக்கழக மாணவர்கள் இருவரது மோட்டார் பைசிக்கிள்களுடன் பேராசிரியரின் மகனது மோட்டார் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. இதற்கு ஆட்சேபனை தெரிவித்து மாணவர்கள் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளதோடு, அதே தினம் இரவு பல்கலைக்கழக மாணவர்கள் சுமார் 300 பேர் குறித்த வாசஸ்தலத்தைச் சுற்றி வளைத்து ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

இச்சமயம் மாணவர் குழுவொன்று பேராசிரியரின் இல்லத்திற்குள் அத்துமீறிப் பிரவேசித்து பேராசிரியர், அவரது மகன், மற்றும் இருவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளது. இதன் விளைவாக பேராசிரியரும் அவரது மகனும் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர்.

இச்சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பல்கலைக்கழக மாணவர்கள் 12 பேர் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவத்தின் போது பல்கலைக்கழக மாணவர்கள் நடந்து கொண்டுள்ள விதம் தொடர்பில் பலத்த ஆட்சேபனை சமூகத்தில் எழுநதுள்ளது. கற்றறிந்த பண்பாளர்களையும் சமூக மேம்பாட்டாளர்களையும் உருவாக்கும் மையங்களாக விளங்கும் பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் இவ்வாறு நடந்து கொள்வதை சமூகம் ஒரு போதும் அங்கீகரிக்காது. வன்முறையாளர்களாகவும் தெருச்சண்டியர்களாகவும் பல்கலைக்கழக மாணவர்கள் ஒருபோதும் நடந்து கொள்ளவும் முடியாது.

ஆகவே பகிடிவதை மற்றும் வன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபடுவதை முற்றாகத் தவிர்த்துக்கொள்வதில் பல்கலைக்கழக மாணவர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். நாட்டினதும் மக்களினதும் முன்னேற்றத்திற்கு பங்களிக்கக் கூடிவர்களிடம் இவ்வாறான செயற்பாடுகள் காணப்படவே கூடாது. அதனால் நற்பண்புகளை வளர்த்துக்கொள்வதிலும் பல்கலைக்கழக மாணவர்கள் கவனம் செலுத்தவும் தவற கூடாது. அவையே இப்போதைய தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# நாவலர் பெருமான் அவதரித்து 200 ஆண்டுகள் நிறைவு மாநாடு

## நல்லூரில் நாளை 14 ஆம் திகதி ஆரம்பம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவதரித்து இருநூறாவது ஜனன ஆண்டிலே இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டிலும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, யாழ்.மாநகரசபை சமய விவகாரக் குழு ஆகியவற்றின் இணை ஏற்பாட்டிலும் எதிர்வரும் 14, 15, 16 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் நாவலர் பெருமான் அவதரித்த இடமான நல்லூரில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாடு நிகழ்ந்தேறவுள்ளது.

நாவலர் பெருமானின் குருபூஜை நன்னாளிலே ஆரம்பமாகி ஜனனதின நாளிலே நிறைவு காணவுள்ள இம்மாநாட்டு நிகழ்வுகள் நல்லூர்ப் பதியிலே நாவலர் மணிமண்டபம், நாவலர் கலாசார மண்டபம், ஸ்ரீ துர்க்கா மணிமண்டபம், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபம் ஆகிய இடங்களிலே ஆன்மிக அரங்கு, பொது அரங்கு, ஆய்வரங்கு என்ற தலைப்புகளின் கீழ் இடம்பெறவுள்ளன.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்திலே ஆன்மிக அரங்கின் தொடக்க நிகழ்வுகள் 14.12.2022 காலை 7.30 மணிக்கு குருபூஜை நிகழ்வுகளோடு ஆரம்பமாகவுள்ளன. அதனைத் தொடர்ந்து நாவலர் பெருமானின் வரலாற்றைச் சித்திரிக்கின்ற ஓவியங்களும் நாவலர் பெருமானால் சமூகத்திற்குத் தரப்பட்ட படைப்புகளும் உள்ளடங்கிய கண்காட்சி நிகழ்வின் அங்குரார்ப்பண வைபவமும் இடம்பெறவுள்ளது.

காலை 8.00 மணிக்கு நாவலர் பெருமானின் திருவுருவப் படம் தாங்கிய திருவூர்வலம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்திலிருந்து நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபம் நோக்கிப் பவனிவரவுள்ளது.

நாவலர் கலாசார மண்டபத்திலே, பெயர்ப் பலகைத் திரை நீக்கத்தினைத் தொடர்ந்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்களுக்கான குருபூஜை நிகழ்வுகளோடு ஆன்மிக அரங்கின் அரங்க நிகழ்வுகள், நல்லை ஆதீன முதல்வர் வணக்கதிற்குரிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் வணக்கத்திற்குரிய து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு.ய.அநிருத்தனன் தலைமையில், யாழ்.மாநகர முதல்வர் கௌரவ வி.மணிவண்ணன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்க நிகழ்வுகள் அரங்கேறவுள்ளன.

இந்நிகழ்வில் 'நாவலர் சைவக்காவலர்' எனும் தலைப்பிலான செஞ்சொற் செல்வர், கலாநிதி ஆறு.திருமுருகனின் சிறப்புரை, நூல் வெளியீடு மற்றும் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் ஆகியவை நாவலர் கலாசார மண்டபத்திலே ஆன்மிக அரங்கில் நிகழ்ந்தேறவுள்ளன.

நல்லூர், ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்திலே, ஐந்து நாட்கள் மாலை நேர நிகழ்வுகளாகப் பொது அரங்கு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணி வரை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

பொது அரங்கின் நிறைவு நாள் நிகழ்வு, நல்லை ஆதீன முதல்வர் வணக்கதிற்குரிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் சர்வதேச இந்து மத பீடச் செயலாளர் வணக்கத்திற்குரிய கலாநிதி இராமச் சந்திரக் குருக்கள் பாபு சர்மா ஆகியோர் திருமுன்னிலை வகிக்க, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய.அநிருத்தனனின் தலைமையில் யாழ் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்க, நர்த்தன ஷேத்திரா நடனப் பள்ளி மாணவர்கள் திருமதி பிரியதர்ஷினி வாசிகன் அவர்களின் நெறியாள்கையில் வள்ளி திருமணம் – நாட்டிய நாடகம், அண்ணாமலைப் பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் தி.பாலச்சந்தர் அவர்களின் பண்ணிசை முதலான கலை நிகழ்வுகளோடு விருது வழங்கல் வைபவமும் இடம்பெறவுள்ளது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாடு நிகழ்வின் கருத்தரங்கம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் 15,16,17 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

கருத்தரங்கின் நிறைவு நாள் வைபவத்தில் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நாவலரின் சமூகப் பணி என்னும் தலைப்பிலான கருத்துரைகள் இடம்பெறவுள்ளன.

நாவலர் ஆண்டிலே நடைபெறும் இந்த மாநாட்டு நிகழ்விலே துறைசார்ந்த ரீதியில் கம்பவாரிதி இ.ஜெயராஜ், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், வைத்திய கலாநிதி இ.லம்போதரன், உலகப்புகழ் பெற்ற ஓவியர் மு.பத்மவாசன் ஆகியோருக்கு நாவலர் புகழ் விருதும் ஆன்மிகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் மற்றும் இந்தியா, தமிழ் நாட்டைச் சேர்ந்த டொக்டர். ந.இராமசுப்பிரமணியன், டொக்டர். சு.அருள்மொழிச்செல்வன் ஆகியோர் நாவலர் புகழ் விசேட கௌரவமும் வழங்கப்படவுள்ளன.





நாவலர் பெருமானை நினைவு கூர்ந்து நாவலர் ஆண்டிலே நிகழவுள்ள இம்மாநாட்டு நிகழ்விலே பங்குகொள்ள அனைவரையும் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் அழைக்கின்றனர்.

ய.அநிருத்தனன்
பணிப்பாளர்
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

# ஷாதுலிய்யா தரீக்காவின் மறைந்த ஆன்மிகத் தலைவர் அஷ்ஷெய்ஹ் முஹம்மத் அல் பாஸி 26 ஆவது நினைவு

## சீனன்கோட்டையில் இன்று 13.12.2022 முதல் 22ஆம் திகதி வரை மஜ்லிஸ் நிகழ்ச்சிகள்

ஷாதுலிய்யாத் தரீக்காவின் உலக ஆன்மீகத் தலைவராக இருந்து தரீக்காவின் வளர்ச்சிக்காக அழியாத சேவைகளைச் செய்தார் பெரியார் சங்கைக்குரிய ஷெய்கு ஸஜ்ஜாதா மர்ஹூம் கலாநிதி அஷ்ஷெய்ஹ் முஹம்மத் அல் பாஸி பின் அஷ்ஷெய்ஹ் முஹம்மத் இப்றாஹிம் அல் பாஸி அல் மக்கி. அவர் ஷாதுலிய்யாத் தரீக்காவின் வளர்ச்சிக்கும் ஆற்றிய பணிகள் என்றும் அழியாதததே.



சுமார் எட்டு தசாப்தங்களுக்கு மேலாக இவ்வாறு சேவையாற்றிய அஷ்ஷெய்ஹ் முஹம்மத் அல் பாஸிஅல் மக்கி அஷ்ஷாதுலி (ரஹ்) அவர்கள் 07.09.1997 தனது 102 ஆவது வயதில் புனித மக்கமா நகரில் உள்ள ஷாதுலிய்யா தரீக்காவின் தலைமையகமான 'பைத்துல் பாஸி'யில் காலமானார். சங்கைக்குரிய சேகு நாயகம் அவர்கள் நபிகள் கோமான் முஹம்மது (ஸல்) அவர்களின் நேரடி வழித்தோன்றலில் மக்காவில் பிரபல்யமும் கௌரவமும் மிக்க அல்பாஸி குடும்பத்தில் பிறந்தார்.

உலக ஷாதுலிய்யாத் தரீக்காவின் தலைவராகப் பல்லாண்டுகள் அரும் பெரும் பணியாற்றிய அன்னார் எகிப்து அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்தில் இறையியல் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றுள்ளார். அன்னார் இஸ்லாமிய சட்டத்துறையில் வல்லுநராகவும் ஒரு சிறந்த இஸ்லாமிய கவிஞராகவும் தலைசிறந்த சன்மார்க்க போதகராகவும் இஸ்லாமிய தத்துவ ஞானத்தில் தேர்ச்சி பெற்ற சன்மார்க்க பெரியாராகவும் தலைசிறந்த பேச்சாளராகவும் திகழ்ந்தார்.

ஆன்மீகத் துறையில் அன்னாரது சேவைகள் சவுதி அரேபியா மன்னர்களினதும் உலக இஸ்லாமிய தலைவர்கள், இஸ்லாமிய பேரறிஞர்கள் உட்பட முழு உலக முஸ்லிம்களின் கவனத்தையும் அங்கீகாரத்தையும் பெற்றிருந்தன. சங்கைக்குரிய செய்கு நாயகம் கலாநிதி அல் பாஸி அவர்கள் சவுதி அரேபியா அரச ஆலோசனைச் சபையின் முன்னாள் உறுப்பினராகவும் உலக முஸ்லிம் காங்கிரஸின் தலைவராகவும் சேவையாற்றியுள்ளார்.

அன்றைய சவுதி மன்னரான அப்துல் அஸீஸ் மற்றும் மேன்மை தங்கிய அரசர் ஸவூத் பின் பைசால் ஆகியோருடன் நெருங்கிப் பழகிய அன்னார் சவூதி அரசால் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பல அரசுத் தூதுக்குழுக்களில் அங்கம் வகித்து வந்தார். இதன் மூலம் இராஜதந்திர ரீதியில் அன்னாரது பணி பாராட்டத் தக்கதாக அமைந்திருந்தது.

சங்கைக்குரிய ஷெய்கு நாயகம் நம்மத்தியில் இன்றில்லை. ஆனால் இறை நல்லடியார்கள் உலகில் வாழ்ந்தாலும் நன்மை மறைந்தாலும் நன்மை என்ற அமுத மொழிக்கு ஒப்ப அன்னாரது போதனைகளை நாம் எடுத்து நடப்பதுடன் தரீக்காவின் நல்அமல்களை சரியாக கடைப்பிடித்தொழுக வேண்டும். அதுவே நாம் அன்னாருக்கு செய்யக்கூடிய கௌரவமாகும்.

பேருவளை
பீ. எம். முக்தார்

# கனகர்கிராம மக்களின் மீள்குடியேற்றத்தை சுய இலாபம் கருதி தடுக்க வேண்டாம்!

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் வேண்டுகோள்

அம்பாறை மாவட்டம் பொத்துவில் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பி. 25 கனகர் கிராம மக்கள் தங்களை தமது சொந்த நிலங்களில் குடியேற்றுமாறு கோரி கடந்த 12 வருடங்களாக தமது நியாயமான போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.இதற்காக அம்மக்கள் தங்களது கோரிக்கையை பிரதேச செயலகம், மாவட்ட காரியாலயம், ஆளுநர் செயலம், ஜனாதிபதி செயலகமென பல்வேறு மட்டத்தின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளனர். சம்பந்தப்பட்ட அலுவலகங்கள் மூலம் அந்த மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்கக்கோரி அறிவுறுத்தல் வழங்கப்பட்ட போதிலும், ஒரு சில அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் தங்களது சுய இலாபங்களின் நிமித்தம் இன்றுவரை கனகர் கிராம மக்களை அவர்களது பூர்வீக இடங்களில் மீளக்குடியமர்த்தாது இழுத்தடிப்பு செய்து வருகின்றனர்.

இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பொத்துவில் பி_ 25கனகர் கிராம மக்கள் 1970 இற்கு முன்னர் பொத்துவில் 60 ஆம் கட்டை கிராமத்தில் சேனைப்பயிர்செய்கைக்காக குடியேறியிருந்ததோடு நாளடைவில் அரசாங்கத்தினால் அந்த மக்களுக்கு காணி அனுமதிப்பத்திரமும் வழங்கப்பட்டிருந்தது. சுமார் 280 குடும்பங்கள் இப்பகுதியில் தமது ஜீவனோபாய தொழிலாக சேனைப்பயிர்செய்கையை மேற்கொண்டு வந்ததுடன் காலவோட்டத்தில் பிறப்பத்தாட்சி பத்திரம் முதல் கொண்டு இறப்பத்தாட்சி பத்திரம், தேசிய அடையாள அட்டை, வாக்காளர் பதிவு, புனர்வாழ்வுப் பத்திரம் என உறுதிப்படுத்தப்பட்ட குடியுரிமை அத்தட்சிப்பத்திரங்களுடன் வாழ்ந்தனர். அம்மக்கள் 1990 யுத்த இடம்பெயர்வுக்கு பின்னர் இன்று தமது பூர்வீக வாழ்விடங்களை தொலைத்து நிற்கின்றனர். 1981 ஆம் ஆண்டில் அப்போதைய பொத்துவில் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும், மட்டக்களப்பு மாவட்ட அமைச்சரும், எனது மாமாவுமாகிய மறைந்த எம்.சி கனகரெட்ணம் அவர்களினால் இப்பிரதேசம் அரச வர்த்தமானியில் பதிவு செய்யப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்டது. அந்த அறிவித்தலோடு அவர் நின்றுவிடாது தேசிய வீடமைப்பு அதிகார சபையினூடாக கடனடிப்படையில் 30 வீடுகள் வழங்கப்பட்டு, தமது எண்ணக்கருவில் உதயமானதால் அதற்கு கனகர்கிராமம் என பெயர் சூட்டியிருந்தார்.



1990 இடம்பெயர்வில் 278 குடும்பங்கள் மாத்திரமல்லாது 30 வீட்டுத்திட்டத்தில் இருந்த மக்களும் முற்றுமுழுதாக வெளியேறியிருந்தமை யாவரும் அறிந்ததே. ஆனால் இன்று தாங்கள் பூர்வீகமாக வாழ்ந்த கிராமத்தில் குடியேறுவதற்காக அந்த மக்களால் முன்னெடுக்கப்படும் போராட்டங்களை 30 வீட்டுத்திட்டத்துக்குள் அடங்கிய போராட்டமாக சில விசமிகள் திட்டமிட்டு திசை திருப்பியுள்ளனர். எமது மக்களின் பூர்வீக நிலங்களுக்கான நியாயமான கோரிக்கையை திசைதிருப்பும் செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

அவர்கள் பூர்வீகமாக வாழ்ந்த கனகர் கிராமம் 3 தசாப்தத்தின் பின்னர் பற்றைக் காடுகளாக காட்சியளிக்கின்றது. அம்மக்கள் தாங்கள் வாழ்ந்த இருப்பிடங்களை தொலைத்து நிற்கின்றனர். தமது இறுதிக்காலத்திலேனும் தமது நிலங்களில் குடியேறி தமது பிள்ளைகளின் எதிர்காலத்தையாவது சிறப்பிக்கவும் தமது இறுதிக்காலத்தில் தமது பூர்வீக நிலங்களில் வாழ்ந்து நிம்மதியடையவும் எதிர் பார்த்து இன்றுவரை வெயிலிலும் மழையிலும் அதிகாரிகளின் அலுவலக படிகளேறி போராடி வருகின்றனர். சுய அரசியலுக்காக அவர்களது நியாயமான போராட்டங்களை திசை திருப்ப வேண்டாம்.


30 வருடங்களுக்கு முன்னர் சேனைப் பயிர்செய்கைக்காக விவசாயத்தை மேற்கொண்ட 278 குடும்பங்கள் யுத்தம் காரணமாக உயிருக்கு பயந்து இடம்பெயர்ந்து செல்கின்ற நிலைமைக்கு தள்ளப்பட்டமை யார் தவறாகும். காலவோட்டத்தில் குடியமராமல் காடுபடர்ந்ததால் குடியுரிமைக்கு சொந்தமான நிலங்கள் வன இலாகாவுக்கு எவ்வாறு சொந்தமாகும்? தமது சொந்த நிலத்துக்குள் செல்லமுடியாதவாறு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளாலும் வனபரிபால திணைக்கள அதிகாரிகளாலும் தடைவிதிக்கப்பட்டிருப்பது கண்டிக்கதக்கதும் வேதனைக்குமுரிய விடயமாகும் .

நாட்டில் இனஐக்கியம், நல்லுறவு ஏற்பட வேண்டுமெனில் அரசியலுக்கு அப்பாற்பட்டு அடிமட்ட மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். யுத்தம் முடிவுற்று 13 வருடங்கள் கடந்து விட்ட நிலையில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் வடக்கு, கிழக்கில் ஆங்காங்கே குடியமர்த்தப்பட்டுள்ள நிலையில் இன்னும் அம்பாறை மாவட்டம் பொத்துவில் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கனகர் கிராமமக்கள் குடியமர்த்தப்படாமல் இருப்பது ஏன்?

கனகர் கிராமமக்கள் யுத்த சூழலில் இடம்பெயர்ந்தாலும் இன்றுவரை வறுமைச் சூழலிலேயே ஜீவனோயாயத்தை நடத்தி வருகின்றனர். இவர்களது வாழ்கைத்தரம் உயர வேண்டுமானால் இவர்களது வாழ்விடங்கள் உறுதிப்படுத்தப்பட்டு அவர்கள் மீள்குடியமர்த்தப்பட வேண்டும்.

இவ்வாறு அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

# நகர்வலம்



# நன்னீர் மீன் உற்பத்தியை அதிகரிக்க மீன்குஞ்சுகளை குளத்தில் விடத் திட்டம்

அநுராதபுரம் தினகரன் நிருபர்)

நன்னீர் மீன் உற்பத்திக்கும், மீன் பிடித் தொழிலுக்கும் அதிக வாய்ப்புள்ள மாகாணமாக வட மத்திய மாகாணம் திகழ்வதால், இத்தொழிலை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என, இத்துறைக்குப் பொறுப்பான அதிகாரிகள் கருத்து தெரிவித்துள்ளனர். இத்திட்டத்தை நோக்காகக் கொண்டு பல்வேறு செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்படுவதாகவும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.முதற் கட்டமாக இம்மாவட்டத்திலுள்ள குளங்களில் மீன்குஞ்சுகளை விடும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.



அநுராதபுரம் கும்பிச்சாங்குளம் வாவியில் விடப்படும் மீன் குஞ்சுகள்

வளர்ந்த பின்னர், ஏனைய நீர்த்தேக்கங்களில் அவற்றை விடுவதும் இத்திட்டங்களில் ஒன்றாகும். இவ்வாறு வளர்க்கப்பட்ட மீன் குஞ்சுகளை விடும் நிகழ்வு அநுராதபுரம் மாவட்ட செயலாளர் திரு.ஜனக ஜெயசுந்தர தலைமையில் அண்மையில் அநுராதபுரத்தில் இடம் பெற்றது. இதன் கீழ், யான் ஓயா நீர்த்தேக்கம் உட்பட ஏனைய நீர்த் தேக்கங்களில் 2,50,000 மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன.

இச்செயற்திட்டத்தை முன்னெடுக்கும் போது, மீன் குஞ்சுகளின் அளவை உயர்த்துவதில் தொழில் முனைவோரின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளவுள்ளதாக நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அநுராதபுரம் மாவட்ட விரிவாக்க அதிகாரி திரு. ஜெயபாகு செனரத் தெரிவித்தார்.

நீரியல்வள அபிவிருத்தி அதிகார சபையின் கலாவெவ நிலையம் இத்திட்டத்தை முறையான தொழில் நுட்பத்துடன் முன்னெடுத்துச் செல்வதற்கு போதிய ஆதரவை வழங்கி வருகின்றது.வட மத்திய மாகாணத்தின் அநுராதபுர மாவட்டத்தில் 14 பாரிய நீர்த்தேக்கங்களும், 85 மத்திய தர நீர்த்தேக்கங்ககளும், 6457 சிறிய நீர்த்தேக்கங்களும் காணப்படுகின்றன.

பாரிய நீர் தேக்கங்களை மையப்படுத்தி நன்னீர் மீன் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கிலே, இக்குளங்களில் மீன் குஞ்சுகள் விடப்படுகின்றன.

# தேசிய மீலாத் தின முத்திரை வெளியீடு

ஏ.எஸ்.எம். ஜாவித்

தேசிய மீலாத் தினத்தை முன்னிட்டு 2022 ஞாபகார்த்த முத்திரை நாளை (14) புதன் கிழமை வெளியிடப்படவுள்ளது.

இவ்வருட தேசிய மீலாத் விழா கடந்த ஒக்டோபர் மாதம் (09) களுத்தறை மாவட்டத்திலுள்ள பேருவளை ஜாமிய்யா நளீமியா கலாபீட கேட்போர்கூடத்தில் இடம்பெற்றிருந்தது. இந்நிலையில்,இத்தினத்துக்கான முத்திரை நாளை வெளியிடப்படவுள்ளது.




# கந்தூரி தமாம் நிகழ்வில் பலஸ்தீன் பள்ளிவாசல் பிரதம இமாம் பங்கேற்பு





(ருஸைக் பாரூக்)

சுல்தானுல் ஆரிபீன் செய்யிதினா அஹ்மதுல் கபீருர் ரிபாயீ (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ்) அவர்களின் 145 வது வருட ஞாபகார்த்த ரிபாய்க்கந்தூரி தமாம் நிகழ்வு (11) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.கொழும்பு 12, ரிபாய் தங்கள் ஒழுங்கையிலுள்ள ரிபாய் தரீக் சங்கத்தில்,இவ்வைபவம் இடம்பெற்றது.

சங்கைகுரிய ரிபாய் மௌலானா அல்ஹாஜ் யு. பி. ஸைய்யத் ஆசிக் தங்கள் இந்நிகழ்வுக்கு தலைமை தாங்கினார்.

நிகழ்வில் பலஸ்தீன மஸ்ஜிதுல் அக்ஸா பள்ளிவாசல் பிரதம இமாம் அஷ்ஷெய்க் உமர் அலி அப்பாஸி கலந்து கொண்டார். சங்கைக்குரிய ரிபாய் மௌலானா ஸைய்யத் ஆசிக் தங்கள், பலஸ்தீன பள்ளிவாசல் பிரதம இமாமுக்கு பொன்னாடைபோர்த்தி கௌரவித்ததார்.

இமாம் அஷ் ஷெய்க் உமர் அலி அப்பாஸி, நாட்டுக்காக விஷேட துஹா பிரார்த்தனை செய்ததுடன், மஸ்ஜிதுல் அக்ஸா பள்ளிவாசலுக்கு வரும் படியும் வேண்டிக்கொண்டார்.

கலீபத்துல் ரிபாயி மௌலவி அஹ்மட் பாலில், மௌலவி அப்துல் காதர் மஹ்லரி மற்றும் வெலிகம ரிபாயியா பெண்கள் அரபு கல்லூரி அதிபர் மௌலவி அப்துல் லாஹ் ரவ்லி ஆகியோர் இந்நிகழ்வில் உரை நிகழ்த்தினார். மௌலவி எம்.என். எம். இஜ்லான், முன்னாள் கொழும்பு பெரிய பள்ளிவாசல் இமாம் மௌலவி எம்.எஸ்.எம். தஸ்லீம், பலஸ்தீன் நாட்டுக்கான முன்னாள் தூதுவர் பவ்சான் அன்வர், முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஷி, பிரதி மேயர் எம்.டி.எம். இக்பால், ரிபாய் தரீக் சங்க உறுப்பினர்கள் , உலமாக்கள் மற்றும் முஹிபீன்களும் இதில்,கலந்து சிறப்பித்தனர்.

# அநுராதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு பசளை விநியோகம்

திறப்பனை தினகரன் நிருபர்

அநுராதபுர மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு 50 கிலோ யூரியா பசளை இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளது.

விவசாய அமைச்சர் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருந்தார். இதையடுத்து, விவசாயக் கழகங்களூடாக இவை விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன. கடந்த வாரம் ஹிதோகம விவசாய வதிவிட பிரிவின் நாச்சியாதீவுப் பகுதி விவசாயிகளுக்கு,பசளை மூடைகள் விநியோகிக்கப்பட்டன. பொருளாதார நெருக்கடிகளுக்குள்ளாகி, குறைந்த அளவில் விவசாயச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்குகே,பசளை வழங்கப்பட்டது.

அதிக விலை கொடுத்து பசளையை வாங்கவிருந்த நிலையில், இலவசமாக பசளை வழங்கப்பட்டமை மகிழ்ச்சியளிப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள சுமார் எழுபதாயிரம் விவசாயிகளுக்கு பசளை வழங்கப்பட்டது.

# குளிர் காலநிலையில் ஆயிரம் கால்நடைகள் உயிரிழப்பு

## ஆய்வு அறிக்கை கோருகிறது அமைச்சு

நாட்டில் நிலவிய கடுங்குளிர் காலநிலையால் கால்நடைகள் உயிரிழந்தமை தொடர்பில்,உடலியல் கூற்று பரிசோதனை நடாத்தவுள்ளதாக விவசாய அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த வாரம் நிலவிய குளிர் காலநிலையால் நாட்டின் வடக்கு,கிழக்கு மாகாணங்களில் சுமார் ஆயிரம் ஆடு, மாடு மற்றும் எருமைகள் உயிரிழந்தன.

வங்காள விரிகுடாவின் பருவநிலையில் ஏற்பட்ட மாற்றத்தால்,வளி மாசடைந்து இந்தக் குளிர் நிலவியது.

இதனால்,ஆயிரக்கணக்கில் கால்நடைகள் உயிரிழந்தன. இதற்கான காரணங்களைக் கண்டறிய உடற்கூற்று பரிசோதனை நடாத்துமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர உத்தரவிட்டுள்ளார்.அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்கவுக்கு இந்த உத்தரவைப் பிறப்பித்த அமைச்சர்,அதன் அறிக்கைகளை அனுப்பி வைக்குமாறும் உத்தரவிட்டார்.

இந்நிலையில்,இறைச்சிப் பாவனையை குறைத்துக் கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க உத்தரவிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



குருநாகல் ஹிஸ்புல்லா மத்திய கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற "கர்நாடக சங்கீதமும் முஸ்லிம் நிகழ்ச்சியும்" மாகாண மட்டப் போட்டியில், புத்தளம் பாத்திமா பாலிகா மகா வித்தியாலயம் மூன்று நிகழ்ச்சிகளில் பங்கேற்றது. இதில், அல் ஹிகாயா வல் பைக், நஷீத் ஆகிய போட்டிகளில் முதலாம் இடத்தையும் கஸீதா போட்டியில் இரண்டாம் இடத்தையும் இப்பாடசாலை பெற்றுக் கொண்டது. பங்கேற்ற மாணவியர்கள் மற்றும் பயிற்றுவித்த ஆசிரியைகளைப் படத்தில் காணலாம்.
படம்: புத்தளம் தினகரன் நிருபர்




# புதையல் தோண்டிய நான்கு பேர் கைது

அநுராதபுரம் தினகரன் நிருபர்

புலஸ்திபுர பகுதியில் புதையல் தோண்டிக்கொண்டிருந்த சந்தேக நபர்கள், நான்கு பேரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து நடாத்தப்பட்ட சுற்றிவளைப்பிலே இவர்கள் கைதாகினர். புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட பொருட்களும் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன.

விசேட அதிரடிப்படையின் அறலகங்வில முகாம் அதிகாரிகளுக்கு இராணுவ புலனாய்வு பிரிவின் அதிகாரிகளால் கிடைத்த தகவலொன்றுக்கமைய புலஸ்திபுர பொலிஸ் பிரிவிலுள்ள தல்பந்த பகுதியில் 11 ஆம் திகதி நேற்று முன்தினம் நடத்திய சுற்றிவளைப்பின் போது புதையல் தோண்டிக்கொண்டிருந்த நான்கு பேரை கைது செய்துள்ளதுடன் புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய உபகரணங்கள் சிலவற்றையும் அறலகங்வில பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.



கைது செய்யப்பட்டவர்கள் 26,43,53,73 வயதுகளையுடய கொழும்பு 07, அம்பலந்தொட்ட, தந்திரிமுல்ல மற்றும் புலஸ்திபுர பகுதிகளை சேர்ந்தவர்களாவர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள கைதான நான்கு பேரையும், கைப்பற்றிய உபகரணங்களையும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் புலஸ்திபுர பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். மேலதிக விசாரணைகளை புலஸ்திபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தபால் ஊழியர்கள் பணி புறக்கணிப்பு; மக்கள் அவதி

**வவுனியா விசேட நிருபர்**

தபால் ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவியரீதியில் நேற்றுமுன்தினம் மாலை தொடக்கம் நேற்று நள்ளிரவு வரை அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மத்திய அஞ்சல் பரிவர்த்தனை நிலையம், தபால் காரியாலயங்கள் மற்றும் நிர்வாக காரியாலயங்களில் எந்தவிதமான கண்காணிப்புமின்றி மேலதிக கொடுப்பனவுக் குறைப்பு, தபால் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் இடமாற்றம், தபால் கட்டணம் மறுசீரமைப்பு, தபால் திணைக்களத்தின் வியாபார நடவடிக்கைகள் வீழ்ச்சியடைவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை போன்ற விடயங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக பணிப் புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



அதற்கு ஆதரவு வழங்கும் வகையில் வவுனியா பிரதான தபால் நிலையம் நேற்றையதினம் மூடப்பட்டிருந்தது. இதன்காரணமாக கடிதங்கள், பொதிகள் அனுப்ப வந்த மக்கள் மற்றும் முதியோர் கொடுப்பனவு பெறுவதற்கு வருகை தந்த முதியவர்கள் என பலரும் ஏமாற்றங்களுடன் திரும்பிச் சென்றிருந்தனர்.

# நல்லூரில் பாரதியார் விழா







யாழ்.இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் பாரதியார் விழா நேற்று முன்தினம் மாலை நல்லூர் துர்க்கா தேவி மண்டபத்தில் துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் 'பாரதி நம் நெஞ்சில் ஆழப் பதிவது சமூகப் பாடல்களிலா? பக்திப் பாடல்களிலா? என்ற பொருளில் பட்டிமன்றம் இடம் பெற்றது. இதில் பேராசிரியர் ஸ்ரீ பிரசாந்தன் கம்பநேசன், இ. வாசுதேவா அதிபர் ந. விஜயசுந்தரம் ,செந்தமிழ்ச் சொல்லருவி ச. லலீசன் ஆகியோர் வாதிகளாகவும் பிரதிவாதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் தொடக்கமாக நீர்வேலி பொன்சக்தி கலாகேந்திரா இயக்குநர் சத்தியப்பிரியா கஜேந்திரனின் நெறியாள்கையில் பாரதி பாடல் நடனமும் இடம்பெற்றது.




காவேரி கலா மன்றத்தின் அனுசரணையுடன் இருள் நீக்கும் பேரொளி மாபெரும் இன்னிசை நத்தார் ஆராதனை கிளிநொச்சி கானான் ஜெப ஆலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் காவேரி கலா மன்றத்தின் இயக்குனர் வணபிதா யோசுவா அடிகளார் உள்ளிட்ட முக்கிய போதகர்கள், பக்தர்கள் கலந்துகொண்டனர்.

# பளையில் கத்திக்குத்து இளைஞன் படுகாயம்

**கரவெட்டி தினகரன் நிருபர்**

பளை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட வண்ணாங்கேணி பகுதியில் நேற்றுமுன்தினம் (10) மாலை வீதியால் சென்றுகொண்டிருந்த இளைஞர் ஒருவர் மீது கத்திக்குத்து மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பளை வண்ணாங்கேணி கிராமத்தில் நேற்றுமுன்தினம் மாலை வேளை அதே கிராமத்தைச்சேர்ந்த இளைஞர் ஒருவர் வீட்டிற்கு சென்றுகொண்டிருந்த வேளை பின்னால் வந்த ஒருவர் இளைஞனை வழி மறித்து மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து குத்தியுள்ளார்.

கத்திக்குத்துக்குக் இலக்கான இளைஞன் உடனடியாக பளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டி மூலமாக கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இளைஞர் மீது தாக்குதல் நடாத்தியவர் தற்காலிகமாகவே பளை வண்ணாங்கேணி பிரதேசத்தில் வசித்து வருவதாகவும் அவர் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் என்றும் பிரதேசமக்கள் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பேசாலை கொலை சம்பவம்
# மூவர் கைது ஒருவர் தலைமறைவு
## பொலிஸார் வலைவீச்சு

**தலைமன்னார் விஷேட நிருபர்**

பேசாலை பகுதியில் தொழில் நிமித்தம் குடியிருந்தவர்கள் ஒன்று கூடி மதுஅருந்திய போது ஏற்பட்ட தகராறினால் ஒருவர் உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் ஒருவர் தலைமறைவாகியுள்ளனர்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர் கொழும்பு, கிருலப்பனை பகுதியைச் சேர்ந்த சுப்பையா ஆறுமுகம் சங்கர் (வயது 40) என தெரியவந்துள்ளது.

இவர் கிளிநொச்சிக்கு தொழிலுக்குச் சென்ற வேளையில் அங்கு ஜெயபுரத்தில் ஒரு பெண்ணை திருமணம் செய்துள்ளார்.

இதனையடுத்து குடும்பத்துடன் பேசாலையில் குடியேறி மீன்வாடியில் தொழில் புரிந்து வந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு உறவினர்களிடம் கடந்த சனிக்கிழமை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பேசாலை பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 3 வயது பெண் குழந்தை பாலியல் துஷ்பிரயோகம்
## தந்தை கைது

**யாழ்.விசேட நிருபர்**

பருத்தித்துறை பகுதியில் மூன்று வயதான பெண் குழந்தையை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய குற்றச்சாட்டில் தந்தையொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மது போதையில் இருந்த தனது கணவன், தனது பெண் குழந்தை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தியதாக குழந்தையின் தாயார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். அதற்கமைய சந்தேகத்தின் பேரில் தந்தை கைது செய்யப்பட்டுள்ளார். குழந்தையை மருத்துவ பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

# சாவகச்சேரி கமநல பிரிவில் விவசாயிகளுக்கு இலவச உரம்

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

சாவகச்சேரி கமநல சேவை நிலைய எல்லைக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பினர் விவசாயிகளுக்கான இலவச உரம் நாளை (14) வழங்கவிருப்பதாக அறிவித்துள்ளனர்.

60 பரப்பு மற்றும் அதற்கு உட்பட்ட வயல் நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு இலவசமாக உரம் வழங்கவுள்ளனர். இலவச உரத்தை சாதாரண விவசாயிகளுடன் மாதாந்தம் ரூ.41,200 உட்பட்ட மாத வருமானத்தை ஈட்டும் அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் ஓய்வூதியர்களான விவசாயிகளும் பெறத்தகுதியுடையவர்களாக கருதப்படுவர். விவசாயிகள் தேசிய அடையாள அட்டை மற்றும் குடும்ப அட்டையுடன் சாவகச்சேரி கமநல சேவை நிலையத்திற்கு வந்து இலவசமாக 50 கிலோகிராம் உரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

# காத்தான்குடியில் சடலம் மீட்பு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

காத்தான்குடி, பாலமுனை நடுவோடை கடற்கரையில் ஆணொருவரின் சடலம் கரையொதுங்கியதைத் தொடர்ந்து மீட்கப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

நாவற்குடா மாரியம்மன் கோவில் வீதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான மனோகரன் (68) என்பவரின் சடலமே நேற்று முன்தினம் (11) இவ்வாறு கரையொதுங்கியுள்ளது.

சடலத்தை அவதானித்த பொதுமக்கள், பொலிஸாருக்கு தகவல் வழங்கியதைத் தொடர்ந்து, பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர், கடந்த 9ஆம் திகதி காணாமல் போனதாக விசாரணையில் தெரிய வந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

# கிழக்கின் குரல்

# தோப்பூரில் குளிரால் உயிரிழந்த சுமார் 50 மாடுகள் புதைப்பு



**கந்தளாய், மூதூர் தினகரன், தோப்பூர் குறூப் நிருபர்கள்**

குளிரான காலநிலையைத் தொடர்ந்து தோப்பூர் பிரதேசத்தில் உயிரிழந்த 50க்கும் மேற்பட்ட மாடுகளின் உடல்கள் தோப்பூர், கரைச்சைப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ளதாக, அம்மாடுகளின் உரிமையாளர்கள் தெரிவித்தனர். மூதூர் பிரதேச சபையின் உதவியுடன் பெக்கோ இயந்திரத்தைப் பயன்படுத்தி கிடங்கு தோண்டப்பட்டு அண்மையில் இவை புதைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கரைச்சைப் பகுதியில் தற்போது சுமார் 5 மாடுகள் உயிருக்கு போராடி வருவதாகவும், அவர்கள் தெரிவித்தனர்.

# கிழக்கில் கால்நடைகளை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க பணிப்பு

## மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத்

**தம்பலகமம் குறூப் நிருபர்**



கிழக்கு மாகாணத்தில் கடந்த சில நாட்களாக நிலவிய கடும் குளிரான காலநிலை காரணமாக கால்நடைகள் உயிரிழந்து வருகின்றமை தொடர்பில் கவனம் செலுத்துவதுடன், அவற்றை பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு, கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் பணித்துள்ளார்.

இது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் நேற்று முன்தினம் (11) அறிக்கையொன்றை விடுத்துள்ள நிலையில், கிழக்கு மாகாணக் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திடம் இப்பணிப்பை விடுத்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"குறைந்தபட்ச வசதிகள் ஏதுமின்றி வனப்பகுதிகளில் கால்நடைகள் சுதந்திரமாக நடமாடுவதால், இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஆகையால், கால்நடைகளுக்கு போதியளவான உணவு மற்றும் தண்ணீரை வழங்க வேண்டுமென்று கால்நடை வளர்ப்பாளர்களுக்கு தெரியப்படுத்துவதுடன், கால்நடைகளுக்கு சூடேற்றுவதற்கு தேவையான தீப்பந்தங்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

கால்நடைகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்காமல், கால்நடைகளை சுதந்திரமாக நடமாடுவதற்கு அனுமதிக்கும் கால்நடை வளர்ப்பாளர்களைக் கையாள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஆராயுமாறும், கிழக்கு மாகாண ஆளுநர் பணித்துள்ளார்.

மேலும், தங்களது கால்நடைகள் மீது அசிரத்தையாக இருக்கும் கால்நடை வளர்ப்பாளர்கள் தொடர்பில் பொலிஸில் முறையிடப்படும் பட்சத்தில், அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், ஆளுநர் தெரிவித்தார்.

கடும் குளிரான காலநிலை காரணமாக திருகோணமலையில் 210 பசுக்களும் அம்பாறையில் 16 பசுக்களும் உயிரிழந்துள்ளதாக, தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் 256 மாடுகள் உயிரிழந்துள்ளதாக, கிழக்கு மாகாணக் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

# படகு விபத்து; வாழைச்சேனை மீனவர்கள் இருவர் மாயம்

**கல்குடா தினகரன் நிருபர்**

வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத்திலிருந்து ஆழ்கடலுக்கு மீன்பிடித் தொழிலுக்காகச் சென்ற மீன்பிடிப் படகொன்று, விபத்துக்குள்ளானதைத் தொடர்ந்து, இருவர் மாயமாகியுள்ளதுடன், ஒருவர் காப்பாற்றப்பட்டுள்ளதாக, வாழைச்சேனை மீன்பிடித் துறைமுக அபிவிருத்திக் குழுவின் முக்கியஸ்தரான எம்.ஏ.சீ.முனவ்வர் தெரிவித்தார்.

வாழைச்சேனையைச் சேர்ந்த எம்.எஸ்.சம்சுதீன் என்பவருக்குச் சொந்தமான படகு, கடந்த 2ஆம் திகதி மீன்பிடித் தொழிலுக்காகச் சென்ற போது, ஹம்பாந்தோட்டைக் கடற்பரப்பில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

கடந்த 9ஆம் திகதி கடலில் திடீரென ஏற்பட்ட காற்றழுத்தத்தால், படகு தலைகீழாக கவிழ்ந்ததாக, காப்பாற்றப்பட்ட மீனவர் தெரிவித்தார்.

ஏனைய இருவருக்கும் என்ன நடந்ததென்பது தொடர்பில் தனக்குத் தெரியவில்லையெனவும், அவர் தெரிவித்தார்.

# கந்தளாயில் 110 தோட்டாக்கள் மீட்பு

**கந்தளாய் தினகரன் நிருபர்**

கந்தளாய், சின்னக்குளம் பகுதியில் T56 ரக துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் 110 தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.இது தொடர்பில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, குப்பையினுள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில், இத்தோட்டாக்கள் நேற்று முன்தினம் (11) மீட்கப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

காட்டு விலங்குகளை வேட்டையாடுவதற்காக இவை மறைத்து வைக்கப்பட்டிருக்கலாமெனவும், பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் கந்தளாய் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆறுமுக நாவலர் பெருமானின் 200ஆவது அகவை; காரைதீவில் 'நாவலர் வீதி'



**காரைதீவு குறூப் நிருபர்**

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமானது எதிர்வரும் 2023ஆம் ஆண்டை நாவலர் ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளதைத் தொடர்ந்து, நல்லைநகர் ஆறுமுக நாவலர் பெருமானின் 200ஆவது அகவை ஆண்டின் செயற்றிட்டங்களிலொன்று அம்பாறை மாவட்டத்தின் காரைதீவில் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில், காரைதீவு 12ஆம் பிரிவில் வீதியொன்றுக்கு 'நாவலர் வீதி' எனப் பெயரிடப்பட்டு, அதன் பெயர்ப்பலகை நேற்று முன்தினம் (11) திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறிலின் ஏற்பாட்டிலும், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட உத்தியோகத்தர்கள் கு.ஜெயராஜி மற்றும் ந.பிரதாப், காரைதீவு கலாசார உத்தியோகத்தர் சிவலோஜினி ஆகியோரின் நெறிப்படுத்தலிலும் இந்நிகழ்வு நடைபெற்றது.

இச்செயற்றிட்டங்களில் ஒன்றாக, மேற்படி வீதிக்கு 'நாவலர் வீதி' எனப் பெயர் சூட்ட காரைதீவு பிரதேச சபை சபை அமர்வில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

# போதைப்பொருளுடன் கைதான எண்மருக்கு விளக்கமறியல்

**ஒலுவில் விசேட, பாலமுனை தினகரன் நிருபர்கள்**

அக்கரைப்பற்று, ஒலுவில் பிரதேசத்தில் ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட 8 பேரையும் எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அவர்கள் போதைப்பொருள் வைத்திருந்தமை தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து, அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, 3 பேரிடமிருந்து ஐஸ் போதைப்பொருளும் 5 பேரிடமிருந்து ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் அண்மையில் ஆஜர்படுத்தப்பட்ட போதே, இவ்விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. ஒலுவில், பாலமுனை, அக்கரைப்பற்றைச் சேர்ந்த 23, 24, 25 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத்துறை அமைச்சு

## கட்டிடங்கள் திணைக்களம் விலைமனுக்களுக்கான அழைப்பு

**அநுராதபுரத்திலுள்ள கிராமிய அருங்காட்சியகத்தின் பிரதான அருங்காட்சியக கட்டிடம் மற்றும் கழிப்பறைக்கான நீடிப்பின் மீதி புதுப்பித்தல் வேலை (II ஆம் படிமுறை)**

**[Contract No.: 04-03-15-2022/CT39]**

1. **36.6** மில்லியன் ரூபா மதிப்பீட்டிலும் கீழே விபரிக்கப்பட்டதுமானதும் அநுராதபுரத்திலுள்ள கிராமிய அருங்காட்சியகத்தின் பிரதான அருங்காட்சியக கட்டிடம் மற்றும் கழிப்பறைக்கான நீடிப்பின் மீதி புதுப்பித்தல் வேலைக்காக (II ஆம் படிமுறை) தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கட்டிடங்கள் திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

   நிர்மாணக் காலப்பகுதியானது 120 நாட்களாகும்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். இந்த பெறுகையின் கீழ் நிறைவேற்றப்படவுள்ள வேலையின் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பெறுமதியானது 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாகவிருப்பதனால், பிராந்திய முன்னுரிமை மற்றும் ***CIDA*** தர முன்னுரிமையானது *04/2016 (iii)* மற்றும் *03/2020* ஆகிய அரச நிதி சுற்றறிக்கைகளில் நிர்ணயிக்கப்பட்டவாறு பிரயோகப்படுத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் சி4 அல்லது சி5 ஆகிய தரங்களுக்காக கட்டிட நிர்மாணத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவு பெற்றவர்களாகவும் விலைமனுக்களை மூடும் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். மேலும், ஒப்பந்தத்தை வழங்கும் திகதியன்றும் பதிவானது செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை குருநாகல், வில்கொட பாதை, கட்டிடங்கள் திணைக்கள 3 ஆம் வலயத்திற்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று, அதே முகவரியில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

   தொடர்பு இலக்கங்கள் பின்வருமாறு: தொலைபேசி: 037-2222437. தொலைநகல்: 037-2222197
5. 2022.12.12 ஆம் திகதியிலிருந்து 2022.12.27 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக எண்ணாயிரம் ரூபாவை (8,000 ரூபா) செலுத்திய பின்னர், குருநாகல், வில்கொட பாதை, கட்டிடங்கள் திணைக்கள 3 ஆம் வலயத்திற்கான பிரதான பொறியியலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. 2022.12.28 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கட்டிடங்கள் திணைக்களம், 2 ஆம் மாடி, ''செத்சிரிபாய'', பத்தரமுல்ல என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். பத்தரமுல்ல, ''செத்சிரிபாய'', 2 ஆம் மாடியின் கட்டிடங்கள் திணைக்கள ஒப்பந்தக் கிளையில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் முன்னிலையில் விலைமனுக்களை அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.
7. விலைமனுக்களை ஏற்றுக் கொள்வதற்காக நிருணயிக்கப்பட்டுள்ள இறுதித் திகதியிலிருந்து அல்லது எந்தவொரு நீடிக்கப்பட்ட காலப்பகுதியிலிருந்தும் விலைமனுக்கள் 91 நாட்கள் காலப்பகுதிக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் பின்வருமாறு அமைந்துள்ள பாங்கில் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   - விலைமனுக்கோரல் ஆவணத்தின் 09 ஆம் பிரிவில் அடக்கப்பட்டுள்ள படிவத்தில்.
   - கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்டதாகவிருத்தல்.
   - 550,000 ரூபா தொகைக்கானதாகவிருத்தல்.
   - 2023 ஏப்ரல் 25 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல்.
   - விலைமனுக்கோரல் தரவின் 16.2 ஆம் **ITB** உபவாசகத்தில் குறிந்துரைக்கப்பட்டுள்ள முகவரான்மைகளின் ஒன்றினால் வழங்கப்பட்டிருத்தல்.
9. பாதுகாப்பு சோதனை நிமித்தம் காரணமாக விலைமனுக்களை மூடும் நேரத்திற்கு 1 மணித்தியாலத்திற்கு முன்னராக ''செத்சிரிபாய'' இடப்பரப்பிற்குள் உட்செல்லுமாறு விலைமனுதாரர்கள் அறிவுரை வழங்கப்படுகின்றனர்.

**பொறியியலாளர் (திருமதி) கே.ஜி.எஸ். குமுதினி,**
**கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம்,**
**பத்தரமுல்ல.**
**www.buildings.gov.lk**

## மீட்கப்படாத அடகு தங்க ஆபரணங்களை ஏலத்தில் விற்பனை செய்தல்

வரையறுக்கப்பட்ட இலங்கை கூட்டுறவு கிராமிய வங்கி பொதுச் சபையின் ஈட்டு முகவர்களான வரையறுக்கப்பட்ட கினிகத்தனை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கினிகத்தனை, லக்ஷபான, விதுலிபுர, பொல்பிட்டிய, வட்டவளை, மொரஹேனகம, அம்பகமுவ, ஹெப்பேகந்த போன்ற கிராமிய வங்கிகளில் 2020.07.01 ஆம் திகதி முதல் 2021.09.30ஆம் திகதி வரை அடகு வைக்கப்பட்டு இதுவரை மீட்கப்படாத தங்க ஆபரணங்களை 2023.01.28ஆந் திகதி மு.ப. 10.30 மணி முதல் சங்கத்தின் கூட்ட மண்டபத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**தலைவர்**
**வ/ப கினிகத்தனை ப.நோ.கூ. சங்கம்,**
**தலைமை அலுவலகம்,**
**கினிகத்தனை.**

**051-2242710, 051-2242270**
**051-2242119, 051-2242233**

## ஹாலிஎல பிரதேச சபை
### கேள்வி அறிவித்தல்

ஹாலிஎல பிரதேச சபைக்குரித்தான பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆதனங்களை 2023-01-01ஆம் திகதி முதல் 2023-12-31ஆம் திகதி வரையான காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்வி வைப்புத் தொகை மற்றும் கேள்விப் படிவக் கட்டணம் என்பன அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| **கேள்விப்படிவம் வழங்குதல்** | : 2022-12-12ஆம் திகதி மு.ப. 9.00 முதல் 2022-12-28 பி.ப. 3.00 மணி வரை |
| **கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல்** | : 2022-12-29 பி.ப. 1.30 மணி வரை |
| **கேள்விப்படிவம் திறக்கப்படுதல்** | : 2022-12-29 பி.ப. 2.00 மணிக்கு |

**அட்டவணை**

| தொ. இல. | ஆதனத்தின் தன்மை | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்கப் படாதது) | கேள்விப் பிணை வைப்பு (மீளளிக்கப் படும்) | ஆகக் குறைந்த கேள்வி ரூபா |
|---|---|---|---|---|
| 01 | ஹாலிஎல நுவரெலியா வீதியிலுள்ள மாட்டிறைச்சிக் கடை (வியாபார உரிமை) | 10,000.00 | 50,000.00 | 1,328,250.00 |
| 02 | அட்டாம்பிட்டி பொது மலசலகூடம் | 500.00 | 500.00 | 26.620.00 |
| 03 | ஸ்பிரிங்வெளி பொது மலசலகூடம் | 500.00 | 500.00 | 72,000.00 |

குத்தகை எடுத்தல் தொடர்பான விபரங்களை வாரத்தின் வேலை நாட்களினுள் விசாரித்தறியலாம் என்பதுடன் கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளுபோது தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் கட்டாயமாகும்.

**விசாரணைகள்: 0552294275**

**தலைவர்,**
**பிரதேச சபை,**
**ஹாலிஎல.**

**திகதி: 2022-12-12**

PEOPLE'S BANK
The Bank of the People

## மக்கள் வங்கி - இரத்தினபுரி கிளை

**1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D என்னும் பிரிவின் கீழான ஏல விற்பனை**

சப்ரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மாவட்டத்தில் குருவிட்ட கோரளையில், தகுண உட பத்துவையில் இரத்தினபுரி பிரதேச செயலக பிரிவில், இரத்தினபுரி நகர சபை எல்லையில், 152 டீ மிஹிந்துகம கிராம உத்தியோகத்தர் பிரிவில், கொஸ்பெலவின்ன ஊரில் அமைந்துள்ள "கேட் பீல்ட்" என்றழைக்கப்படும் இலக்கம் 5962 உடைய வரைபடத்தில் A என குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் சகலவற்றையும் உள்ளடக்கிய காணித்துண்டு.
காணியின் விஸ்தீரணம்: ஒரு றூட் மூன்று தசம் இரண்டு பர்ச்சஸ் (ஏ00.றூ.01.பே.3.20)

**மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் என்னால் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு காணி அமைந்துள்ள இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.**

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக:**
2022.11.18 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2022.11.18 ஆந் திகதிய "தினமின", "டெய்லி நியூஸ்" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்கான அணுகுவழி:**
இரத்தினபுரி நகர மையத்திலிருந்து பெல்மடுல்ல நோக்கி இரத்தினபுரி அம்பிலிப்பிட்டிய பிரதான வீதியில் 1.0 கிலோ மீற்றர் சென்றபின், இடதுபுறம் இரத்தினபுரி வேவெல்வத்த வீதியில் லைசியம் சர்வதேச பாடசாலையைக் கடக்கும்போது, எதிர்கொள்ளும் பாலத்தைக் கடந்து, இடது புறம் மஹவல்வத்தை சாலையில் சுமார் 200 மீற்றர் தூரம் பயணித்த பின் மீண்டும் சந்தியில் இடப்புறம் திரும்பி சுமார் 100 மீற்றர் சென்றவுடன் குறித்த சொத்து வீதியின் இடது பக்கம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செய்யும் முறை:**
உத்தேச கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும்:-
(1) கொள்வனவு விலையின் பத்து சத விகிதம் (10%), (2) உள்ளுராட்சி மன்ற வரி 1%, (3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5%, (4) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள், (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 2,000.00, (6) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000.00
கொள்வனவு விலையின் எஞ்சிய (90%), பணம் விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய அலுவலகம், புதிய நகரம், இரத்தினபுரி எனும் முகவரிக்குச் செலுத்தப்படுத்தல் வேண்டும்.

தொலைபேசி: இல. 045-2223084, 045-2230818, 045-2232108, 045-2232207
சொல்லப்பட்ட தொகை மேலே விதிக்கப்பட்டவாறு 30 நாட்களினுள் செலுத்தப்படாவிடின், செலுத்திய பத்து வீத (10%) பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும், அதே காணியை மறு ஏல விற்பனை செய்வதற்கும், வங்கிக்கு அதிகாரமுண்டு.
உரித்துறுதிகளையும் வேறு சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் முன்கூறப்பட்ட முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
முன்னறிவித்தலின்றி விற்பனையை நிறுத்துவதற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை மக்கள் வங்கி கொண்டுள்ளது.

**கே. பீ. என் சில்வா, (ச.நீ.)**
சிரேட்ட ஏலவிற்பனையாளர், விலைமதிப்பீட்டாளர்
மற்றும் நீதிமன்ற ஆணையாளர்,
109/12A, கோதமி வீதி, பொரல்ல, கொழும்பு 08.
தொ.பே. 011-2674626, 077-8441812.

நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

## விலைமனுக் கோரல்

**செயற்படும் குத்தகை முறையின் கீழ் நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக்கொள்கைகள் அமைச்சுக்கு வாகனங்களை கொள்வனவு செய்தல்**

நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் சார்பில் அமைச்சின் பெறுகை குழுவின் தலைவர், கீழே காட்டப்பட்டுள்ள வாறு செயற்படும் குத்தகை முறையின் கீழ் நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சுக்கு வாகனங்களை வழங்குவதற்காக தகுதியான மற்றும் தகைமையுடைய விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலை மனுக்களை கோரியுள்ளார்.

நியதிகள் மற்றும் நிபந்தனைகள்

| | |
|---|---|
| வாகன வகை | : 18 மோட்டார் கார்கள் மற்றும் 03 டபிள் கெப் வண்டிகள் |
| வாகன நிலை | : பணியமர்த்தப்படும் இடத்தில் 100,000 கிமீக்கும் குறைவான மைலேஜ் கொண்ட வாகனங்கள். |
| ஒப்பந்த காலம் | : 36 மாதங்கள் |
| தகுதியான வழங்குநர்கள் | : வாகன முகவர்கள் (உலகப் புகழ்பெற்ற வாகன பிராண்ட்களின் உரிமையாளர்கள்): மத்திய வங்கியில் பதிவுசெய்யப்பட்ட நிதி நிறுவனங்கள், குறைந்தபட்சம் 10 வாகனத் தொகுதியைக் கொண்ட வாடகைக் கார் சேவைகள். |
| வழங்கப்பட வேண்டிய சேவைகள் | : வருடாந்த உரிமம், உமிழ்வு சோதனை மற்றும் காப்புறுதி உட்பட அனைத்து வழக்கமான பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புகளை குத்தகைதாரர் ஏற்க வேண்டும். |
| வாகனங்களை பதிலீடு செய்தல் | : பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் 24 மணி நேரத்திற்கும் மேலாக இருந்தால், அதே வகை வாகனம் வழங்கப்பட வேண்டும். |

வாகன விவரங்கள்

| லொட் | வாகனங்கள் வகை | வாகனங்களின் எண்ணிக்கை | திருப்பி செலுத்தப்படாத கட்டணம் | விலைமனு பாதுகாப்பு செல்லுபடியாகும் |
|---|---|---|---|---|
| லொட் A | மோட்டார் கார் | 18 | 10,000.00 | 2023.05.04 |
| லொட் B | டபள் கெப் | 03 | 3,500.00 | 2023.05.04 |

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரையில் 2023.01.03 வரை தொடர்பு இலக்கங்கள் 011-2484538/011-2484600 (நீடிப்பு: 1430) மூலம் கணக்காளர் (வழங்கல்), நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு, செயலகம், கொழும்பு - 01 மேலதிக தகவல்களைப் பெறலாம். விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுப்பை 2022.12.13 முதல் 2023.01.03 வரை காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை திருப்பிச் செலுத்தப்படாத கட்டணத்தைச் செலுத்தி, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் பிரதான கணக்காளரிடம் எழுத்துபூர்வ கோரிக்கையை சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். கொடுப்பனவுகள் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் சிறாப்பருக்கு பணமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும்.

விலை மனுக்கள் மேல் தரைதளம், திறைசேரி புதிய கட்டிடம், பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் நிதிப் பிரிவில் உள்ள டெண்டர் பெட்டியில் வைப்புச் செய்யப்பட வேண்டும் அல்லது பதிவு செய்யப்பட்ட அஞ்சல் முகவரி மூலம் லோட்டஸ் வீதி கொழும்பு - 01 இல் அமைந்துள்ள தலைவர், அமைச்சின் பெறுகைக் குழு, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுக்கு 2022.01.04 அன்று பிற்பகல் 2.00 மணிக்குள் அல்லது அதற்கு முன்னதாக சென்றடையும் வகையில் அனுப்ப வேண்டும். அதன் பின்னர் விலைமனுக்கள் உடனடியாக கொழும்பு - 01 லோட்டஸ் வீதியில் உள்ள பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் புதிய கட்டிடத்தின் மேல் தளமாடியிலுள்ள நிதிப் பிரிவில் ஏலதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமான ஏலங்கள் நிராகரிக்கப்படும்.

2022 ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு கொழும்பு - 01, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் நிதிப் பிரிவு மேல் தரைத்தள புதிய கட்டிடம், கொழும்பு - 01 இல் விலை மனுவுக்கு முன்னரான கூட்டம் நடைபெறும்.

**தலைவர்,**
**அமைச்சின் பெறுகைக் குழு,**
**நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு**
**லோட்டஸ் வீதி, கொழும்பு 01.**
2022.12.13

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத்துறை அமைச்சு

## கட்டிடங்கள் திணைக்களம்
## விலைமனுக்களுக்கான அழைத்தல்

1. கீழே விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கட்டிடங்கள் திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| | வேலையின் விளக்கம் | மதிப்பிடப் பட்டுள்ள ஆகுசெலவு (மில். ரூபாவில்) | ஒப்பந்தக் காலம் (நாட்களில்) | CIDA தரம் | விலைமனு செல்லு படியாகும் காலம் | விலைமனுப் பிணை (ரூபாவில்) | விலைமனு செல்லு படியாகும் திகதி | மீளளிக் கப்படாத கட்டணம் (ரூபாவில்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | யாழ் பல்கலைக்கழக யாழ் வளாகத்தில் 2 எண்ணிக்கையான சாக்கடை சுத்திகரிப்பு பொறித்தொகுதிகளின் நிர்மாணம் (வடிவமைத்து நிர்மாணித்தல்) [Contract No.: 04-03-16-2022/CT37) | 32.1 | 180 | சி-5 அல்லது சி-4 | 91 | 480,000 | 2023 ஏப்ரல் 25 ஆம் திகதியன்று வரையும் | 8,000 |
| 2. | யாழ் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் 1 எண்ணிக்கையான சாக்கடை சுத்திகரிப்பு பொறித்தொகுதியின் நிர்மாணம் (வடிவமைத்து நிர்மாணித்தல்) [Contract No.: 04-03-16-2022/CT38) | 8.0 | 120 | சி-7, சி-6 அல்லது சி-5 | 77 | 120,000 | 2023 ஏப்ரல் 11 ஆம் திகதியன்று வரையும் | 3,500 |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். இந்த பெறுகையின் கீழ் நிறைவேற்றப்படவுள்ள வேலையின் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பெறுமதியானது 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாகவிருப்பதனால், பிராந்திய முன்னுரிமை மற்றும் ***CIDA*** தர முன்னுரிமையானது *04/2016 (iii)* மற்றும் *03/2020* ஆகிய அரச நிதி சுற்றறிக்கைகளில் நிர்ணயிக்கப்பட்டவாறு பிரயோகப்படுத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் நீர் வழங்கல் மற்றும் சாக்கடை ஒப்பந்தக்காரர்கள் துறையில் மேலேயுள்ள அட்டவணையில் குறிந்துரைக்கப்பட்டவாறான தரத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவு பெற்றவர்களாகவும் விலைமனுக்களை மூடும் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளவர்களாகவுமிருத்தல் வேண்டும். மேலும், இப்பதிவானது ஒப்பந்தத்தை வழங்கும் வரையிலும் செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும்.

   ''விலைமனுதாரர்கள் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தங்களை பதிவு செய்திருத்தல் வேண்டும். விலைமனுவுடன் பதிவுச் சான்றிதழின் (பிசிஏ-03) மூலப் பிரதியானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிசிஏ-03 சான்றிதழை சமர்ப்பிக்காத அவ்வாறான எந்தவொரு விலைமனுதாரருக்கும் பெறுகை ஒப்பந்தமானது வழங்கப்பட மாட்டாது''.

   விலைமனுதாரரானவர் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கீழுள்ள கழிவு நீர் விஷேடத்துவத்திலும் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை யாழ்ப்பாணம், குருநகர், கடற்கரை வீதி, கட்டிடங்கள் திணைக்களம், 2 ஆம் வலயத்திற்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் அதே முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

   தொடர்பெண்கள் பின்வருமாறு: தொலைபேசி: 021-2222781. தொலைநகல்: 021-2222781.
5. 2022.12.12 ஆம் திகதியிலிருந்து 2022.12.27 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மேலேயுள்ள அட்டவணையில் குறிந்துரைக்கப்பட்டவாறான மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், யாழ்ப்பாணம், குருநகர், கடற்கரை வீதி, கட்டிடங்கள் திணைக்களம், 2 ஆம் வலயத்திற்கான பிரதான பொறியியலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.
6. 2022.12.28 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கட்டிடங்கள் திணைக்களம், 2 ஆம் மாடி, ''செத்சிரிபாய'', பத்தரமுல்ல என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். பத்தரமுல்ல, ''செத்சிரிபாய'', 2 ஆம் மாடியின் கட்டிடங்கள் திணைக்கள ஒப்பந்தக் கிளையில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் முன்னிலையில் விலைமனுக்களை அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.
7. விலைமனுக்களை ஏற்றுக் கொள்வதற்காக நிருணயிக்கப்பட்டுள்ள இறுதித் திகதியிலிருந்து அல்லது எந்தவொரு நீடிக்கப்பட்ட காலப்பகுதியிலிருந்தும் விலைமனுக்கள் 91 நாட்கள் காலப்பகுதிக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் பின்வருமாறு அமைந்துள்ள விலைமனுப்பிணைப் பாங்கில் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   - விலைமனுக்கோரல் ஆவணத்தின் 05 ஆம் பிரிவில் அடக்கப்பட்டுள்ள படிவத்தில்.
   - கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்டதாகவிருத்தல்.
   - மேலேயுள்ள அட்டவணையில் குறிந்துரைக்கப்பட்டுள்ள தொகைக்கானதாகவிருத்தல்.
   - மேலேயுள்ள அட்டவணையில் குறிந்துரைக்கப்பட்டுள்ள திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல்.
   - விலைமனுக்கோரல் தரவின் 16.2 ஆம் **ITB** உபவாசகத்தில் குறிந்துரைக்கப்பட்டுள்ள முகவராண்மைகளின் ஒன்றினால் வழங்கப்பட்டிருத்தல்.
9. பாதுகாப்பு சோதனை நிமித்தம் காரணமாக விலைமனுக்களை மூடும் நேரத்திற்கு 1 மணித்தியாலத்திற்கு முன்னராக ''செத்சிரிபாய'' இடப்பரப்பிற்குள் உட்செல்லுமாறு விலைமனுதாரர்கள் அறிவுரை வழங்கப்படுகின்றனர்.

**பொறியியலாளர் (திருமதி) கே.ஜி.எஸ். குமுதினி,**
**கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம்,**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**2 ஆம் மாடி, ''செத்சிரிபாய'',**
**பத்தரமுல்ல.**

### வீதிப் போக்குவரத்து சேவை அதிகார சபை - வடமத்திய மாகாணம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு

வீதிப் போக்குவரத்து சேவை அதிகார சபையின் பெறுகைக் குழுத் தலைவர் மற்றும் வடமத்திய மாகாண வீதிப் போக்குவரத்து அதிகார சபையின் தலைவராக என்னால் இந்த அதிகார சபையின் கீழ் 2023ஆம் வருடத்தில் குறித்த 04 பொது மலசலகூட முறைமைகளின் துப்புரவேற்பாட்டு வசதிகளை பேணுவதற்கு ஒரு வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைக்கோரல் முன்மொழிவுகளை தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள வடமத்திய மாகாணத்தில் வசிக்கும் விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| விபரங்கள் | விலைக்கோரல் ஆவணக் கட்டணம் | | ஆகக் குறைந்த மாதாந்த விலைக் கோரல் | ஒப்பந்தக் காலம் |
|---|---|---|---|---|
| | மீளளிக்கப்படாத விலைக் கோரல் ஆவணக் கட்டணம் | மீளளிக்கப் படும் விலைக் கோரல் பிணை வைப்பு | | |
| அநுராதபுரம் பழைய பஸ் நிலைய மலசலகூட முறைமை | 1,000.00 | 10,000.00 | 45,000.00 | 2023-01-01 முதல் 2023-12-31 வரை |
| அநுராதபுரம் நெடுந்தூர சேவை பஸ் நிலைய மலசலகூட முறைமை | 1,000.00 | 10,000.00 | 60,000.00 | |
| அநுராதபுரம் புதிய பஸ் நிலைய மலசலகூட முறைமை | 1,000.00 | 10,000.00 | 75,000.00 | |
| கெகிராவ பஸ் நிலைய மலசலகூட முறைமை | 1,000.00 | 10,000.00 | 85,000.00 | 2023-02-01 முதல் 2024-01-31 வரை |

01. கேள்வி விண்ணப்பப்படிவங்கள் மற்றும் அறிவுறுத்தல் படிவங்களை 2022-12-13ஆம் திகதி முதல் 2022-12-27ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை அநுராதபுரம் வித்தியாலய மாவத்தையில் அமைந்துள்ள வீதிப் போக்குவரத்து சேவை அதிகார சபையின் பிரதான அலுவலகத்திற்கு வருகை தந்து பெற்றுக்கொள்ளலாம்.
02. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் 2022-12-28ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு நிறைவுறும் என்பதுடன் அன்றைய தினத்தில் அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் சகல விலைமனுதாரர்களும் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் 2022-12-28ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு வீதிப் போக்குவரத்து அதிகார சபையின் தலைவரின் உத்தியோகபூர்வ அறையில் திறக்கப்படும். இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
03. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு இயைபான மேலதிக விபரங்கள் மற்றும் கேள்வி நிபந்தனைகள் என்பன விண்ணப்பங்களுடன் வழங்கப்படும்.
04. மேலதிக விபரங்களை 025-2227956 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வீதிப் போக்குவரத்து சேவை அதிகாரசபை,**
**வடமத்திய மாகாணம்.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2023

## பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகம், கொழும்பு
## மேல் மாகாணம்

2023ஆம் ஆண்டில் கொழும்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிற்குத் தேவையான கீழ்க்காணப்படும் மருத்துவமல்லாத உபகரணங்களை வழங்குவதற்காகப் பதிவு செய்து கொள்வதற்கு ஆர்வமுள்ள தேசிய உற்பத்தியாளர்கள்/ அதிகாரம் பெற்ற முகவர்கள்/ மொத்த வியாபாரிகள்/ மற்றும் அரச அங்கீகாரம் பெற்றுள்ள நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. இதற்காக கீழே 07ஆம் இலக்கத்தில் காணப்படும் மாதிரிப்படிவத்தின் பிரகாரம், விண்ணப்பப்படிவத்தை சுயமாகத் தயாரித்து பூரணப்படுத்தி பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில், '2023ஆம் ஆண்டிற்கான மருத்துவமல்லாத உபகரணங்களை வழங்குநர்களைப் பதிவு செய்தல்' எனக்குறிப்பிடுதல் வேண்டும்.

03. எமது நிபந்தனைகள் மற்றும் நியதிகளிற்கு அமைவாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள், 2023.01.04 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, 'தலைவர், பிராந்தியப் பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், த.பெ. 1287, புதிய செயலகக் கட்டிடம், மாளிகாவத்தை, கொழும்பு 10' என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் தபாலில் காணாமல் போகும் அல்லது தாமதமாக கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் தொடர்பாக எமது நிறுவனம் பொறுப்பேற்க மாட்டாது.

04. பல தொகுதிகளிற்காகப் பதிவு செய்து கொள்ள ஆர்வமுள்ள வழங்குநர்கள், ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், தொகுதி ஒன்றிற்காக மீளளிக்கப்படாத ரூபா 1,000.00 இற்கான தொகையைச் செலுத்தி, கொழும்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக கணக்காளரிடம் பெற்றுக்கொள்ளும் மே.மா. 01 பற்றுச்சீட்டு விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

05. மருத்துவமல்லாத உபகரணங்களை, குறைந்தபட்சம் ஒரு மாதகால கடன் அடிப்படையில் வழங்குவதற்கு இணங்குதல் வேண்டுமென்பதுடன் வழங்குநர், பண்டங்களை இலவசமாக போக்குவரத்து செய்தல் வேண்டும்.

06. தொகுதி

| | |
|---|---|
| 01 | எழுது கருவிகள்<br>(ஏ4, ஹா∴ப் ஷீட், வர்ணம் ஏ4, கணனிக் காகிதம், ரோணியோ, ∴பைல் அட்டைகள், ஸ்டெப்லர், ஸ்டெப்லர் முள்கள், பேனாக்கள், பென்சில்கள், அழிக்கும் இரப்பர்கள், அடிமட்டம், கூட்டல் இயந்திரங்கள் CR புத்தகங்கள், மை பேட்கள், பேட் மைகள், குண்டூசிகள் இணைப்பு முள்கள், போன்ற அலுவலக எழுது கருவிகள்) |
| 02 | டோணர்கள் |
| 03 | வளிச்சீராக்கி இயந்திரங்கள் |
| 04 | வாகனங்களிற்கான டயர், டியூப், பெற்றறிகள் |
| 05 | அலுவலக மின் உபகரணங்கள்<br>(நிழற்படப் பிரதி இயந்திரங்கள், அச்சு இயந்திரங்கள், CCTV கெமராக்கள், கணனிகள், கணனி உதிரிப்பாகங்கள்) |
| 06 | அலுவலக தளபாடங்கள்<br>(நிறைவேற்றுக் கதிரைகள், கணனி கதிரைகள், விரிவுரை மண்டபத்திற்கான கதிரைகள், உட்பட அலுவலக கதிரை வகைகள் மற்றும் புத்தக ராக்கைகள், கபட்டுகள் போன்றவை.) |
| 07 | இரும்புத் தளபாடங்கள் (இரும்பு அலுமாரிகள், கோவை கபட்டுக்கள், இராக்கைகள், மேசைகள், கதிரைகள், கட்டில்கள் போன்றவை) |
| 08 | மரத்தளபாடங்கள்<br>(மேசைகள், கதிரைகள், கட்டில்கள், புத்தக ராக்கைகள் போன்றவை) |
| 09 | மின் உபகரணங்கள்<br>மின்விசிறிகள், மின் கேத்தல்கள், மின் அடுப்புக்கள் குளிரூட்டிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள் போன்றவை.) |
| 10 | கட்டிடப் பொருட்கள்<br>(கல், மணல், சீமெந்து, கம்பி, PVC குழாய்கள், மின் கம்பிகள் கேசின், சுவிச்சுகள் உட்பட மின் துணை உறுப்புக்கள்) |
| 11 | பொலிதின் உற்பத்திகள் (குப்பை உறைகள் போன்றவை) |
| 12 | பாவனையாளர் மற்றும் சுகாதாரப் பாதுகாப்புப் பொருட்கள். (பீடை நாசினி திரவங்கள், கழிவறை பாத்திரங்களை சுத்திகரிக்கும் பொருட்கள், சவர்க்கரம், தும்புக்கட்டைகள், கூட்டுமாறுகள், தூரிகைகள் போன்றவை.) |
| 13 | பிளாஸ்டிக் உற்பத்திகள். (பிளாஸ்டிக் கொள்கலன்கள், குப்பைத் தொட்டிகள், பெலட்டுகள் போன்ற உற்பத்திகள்) |

தலைவர், பிராந்தியப் பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், த.பெ. 1287, புதிய செயலகக் கட்டிடம், மாளிகாவத்தை, கொழும்பு-10. (தொலைபேசி இல: 0112326248)

07. மாதிரி விண்ணப்பப்படிவம்

### வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2023
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் – கொழும்பு
மேல் மாகாணம்
**விண்ணப்பப் படிவம்**

01. விண்ணப்பிக்கும் தொகுதி : ..............................................
02. வழங்குநரின் பெயர் : ..............................................
03. வியாபாரத்தின் பெயர் : ..............................................
04. வியாபாரத்தின் முகவரி : ..............................................
05. தொலைபேசி இலக்கம் : ..............................................
06. தொலைநகல் இலக்கம் : ..............................................
07. வியாபாரப் பதிவு இலக்கம் : ..............................................
மற்றும் திகதி : ..............................................
(வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்று இணைக்கப்படல் வேண்டும்)
08. பற்றுச்சீட்டு

ஒட்டவும்

09. குறைந்தபட்சம் ஒரு மாத கடன் அடிப்படையில் பண்டங்களை வழங்குவதற்கு உடன்படுகின்றேன்./ உடன்பட மாட்டேன். (தேவையற்ற வசனங்களை வெட்டி விடவும்)
10. போக்குவரத்து வசதிகள் இலவசமாக வழங்கப்படும்./ வழங்கப்பட மாட்டாது. (தேவையற்ற வசனங்களை வெட்டி விடவும்)

மேற்படி தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும், நிறுவனத்தின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளிற்கு உடன்படுகின்றெனெனவும், அதன்படி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நான்/ நாங்கள் இணங்குகின்றேன்./ இணங்குகின்றோம்.

**திகதி**.......................................... ..................................................
**கையொப்பம்**

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/LP/22/PT/10/059 | Supply of Paint and Thinner | 60,000.00 | 1,000.00 | 28-12-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 டிசம்பர் 13ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்படப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை, இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 1483024, 2482638**
**தொலைநகல் எண்: 2381652, 2470443**

# கொழும்பு மாநகர சபை

## விலைக்கோரல்களுக்கான அழைப்பு

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | விபரம் | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி | மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளும் நபர் |
|---|---|---|---|---|---|
| 1 | ME/ME/ML/122/2022 | கொழும்பு நகரத்திற்கான Smart Parking முகாமைத்துவ முறைமைக்கு ஆலோசனை சேவைக்கான பெறுகை | 5,750.00 | இறுதி விலைக்கோரல் தொகையின் 2% நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி | பொறியியல் பணிப்பாளர் (TDRS) தொலைபேசி: 011-2694593 |

**விலைமனுதாரர் / கேள்விதாரரின் தகுதிகள்**

- இதனையொத்த தன்மையான திட்டங்களைச் செயற்படுத்தும் ஆலோசனை நிறுவனங்கள் (ஒரு தனி நபரைக் கொண்ட நிறுவனம் தவிர)
- இதனையொத்த தன்மையான திட்டங்களின் கொள்ளளவைக் கொண்டுள்ள அரசாங்க அமைப்புகள்
- கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள இதனையொத்த தன்மையான திட்டங்களுக்கு ஆலோசனை சேவைகளை வழங்குவதற்கான தகைமை வாய்ந்த பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள்

Smart Parking முகாமைத்துவத்தில் அல்லது Smart அம்சங்களுடன் கூடிய தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பு அடிப்படையிலான திட்டங்கள் மட்டுமே சார்பு திட்டங்களாகக் கருதப்படுகின்றன. மேலும் அவை நிதி பகுப்பாய்வு மூலம் ஒத்துழைப்பை நல்குதல் வேண்டும்.

விலைமனுதாரரின் தகுதிகள் மற்றும் அனுபவத் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணத்தின் குறிப்பு விதிமுறை பிரிவில் தரப்பட்டுள்ளன.

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 01** - கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து **(www.colombo.mc.gov.lk)** தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

i. மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.
   அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.
   ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

➢ **வட்டார அலுவலகம் 04,**
இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06.

➢ **வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு,**
மாளிகாகந்த, கொழும்பு 10.

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.
iii. இணைய தளத்திலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்கள் பின்வரும் விபரங்களை dirproj@Colombo.mc.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.

1. நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி
2. தொடர்புகொள்ளும் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி

**முறை 02 - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.**

அ. ஒவ்வொன்றிற்கும் விலைமனுவிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை 2023-01-02ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையில் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அ. கொடுப்பனவுகளை 2023-01-02ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் மேற்கொள்ளுதல் வேண்டும்.

ஆ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 210 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/பிணை 2023.08.01ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனுக்கள் 2023.07.02ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

இ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2023-01-03ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

ஈ. 2023-01-03ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

உ. விலைமனுக்களின் விபரங்கள் விலைமனு ஆவணங்களுடன் வழங்கப்படும். 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட கேள்விகள்/ விலைமனுக்களுக்கு கேள்விதாரர்/ விலைமனுதாரர் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு செய்து கொண்ட பின் PCA 3 படிவத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஊ. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2022-12-22ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நகர மண்டப கட்டிடம், TDRS பிரிவு, கூட்ட அறையில் இடம்பெறும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

# போஷாக்கின்மையால் மலையக மாணவர்கள் பெரிதும் பாதிப்பு

## இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**



நாடளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள மாணவர்களுக்கிடையேயான போஷாக்கின்மை பிரச்சினையில் தோட்ட பாடசாலைகளில் உள்ள மாணவர்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் ஜோஸப் ஸ்டாலின் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஹற்றனில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் அவர் மேலும் உரையாற்றுகையில்,

நாடளாவிய ரீதியில் 43 இலட்சம் மாணவர்கள் இருக்கின்ற போதும் அதில் 11 இலட்சம் மாணவர்களுக்கே கல்வி அமைச்சு மூலம் உணவுத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. அதுவும் தலா ஒரு மாணவருக்கு 100 ரூபா மாத்திரம். இது எவ்வாறு சாத்தியப்படும்.

29 இலட்சம் மாணவர்களுக்கு போசாக்கு அவசியம் என யுனிசெப் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையையும் இங்கு நினைவு படுத்த விரும்புகின்றேன். போஷாக்கின்மையால் மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தருவதும் குறிப்பாக பெருந்தோட்டப்பகுதியில் குறைவடைந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

போசாக்கு பிரச்சினை எதிர்கால மாணவர்களின் கல்வியை பெரிதும் பாதிக்கும். ஆகையால் அரசு இது குறித்து முறையான திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டியது அவசியம் என்றார்.

---

**பெருந்தோட்ட அமைச்சு**

**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்**

**இல. 21, மீராணியா வீதி, கொழும்பு-12.**

## கெலேபொக்க தோட்டத்தின் ஏலக்காய் விளைச்சல் மற்றும் ஹுன்னஸ்கிரிய / கல்பிஹில்ல தோட்டங்களின் கிராம்பு விளைச்சலை இரண்டு வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குதல்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் கெலேபொக்க தோட்டத்தின் ஏலக்காய் விளைச்சல் மற்றும் ஹுன்னஸ்கிரிய / கல்பிஹில்ல தோட்டங்களின் கிராம்பு விளைச்சலை இரண்டு வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

நிறுவனக் கடிதத் தலைப்பில் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து மற்றும் மீளளிக்கப்படாத 2000.00 ரூபா கட்டணத்தை இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் காசாளருக்கு செலுத்தி, கேள்வி ஆவணங்கள் உட்பட விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை 2022-12-15ஆம் திகதி முதல் 2022-12-28ஆம் திகதி வரையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்திலிருந்தும் மற்றும் 2022-12-15ஆம் திகதி முதல் 2022-12-27ஆம் திகதி வரையில் கல்பிஹில்ல, எமது பிராந்திய அலுவலகத்திலிருந்து வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.30 மணி வரையில் கொள்வனவு செய்யலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கெலேபொக்க தோட்டத்தின் ஏலக்காய் விளைச்சல் மற்றும் ஹுன்னஸ்கிரிய / கல்பிஹில்ல தோட்டங்களின் கிராம்பு விளைச்சலை இரண்டு வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குதல்'' எனக் குறிப்பிட்டு, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தில் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2022-12-28ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு முன் உள்ளிடல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும், முழுமையற்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைக்கோரல் பிணை முறியாக இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் பேணப்படும் 046100240000933 எனும் கணக்கிலக்கத்திற்கு இருபத்தையாயிரம் ரூபாவை (ரூபா 25,000.00) வைப்புச் செய்த பற்றுச்சீட்டை விலைமனு ஆவணத்துடன் இணைத்திருத்தல் கட்டாயமாகும்.

2022-12-28ஆம் திகதி பி.ப. 1.00 மணியின் பின் எக்காரணம் கொண்டும் கேள்விப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் இறுதி நேரத்தின் பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**21, மீராணியா வீதி,**
**கொழும்பு -12.**

**தொலைபேசி: 011-5921463**

---

# உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

## பெறுகை அறிவித்தல்

**Maintenance of Perimeter and Inner Firewalls at Inland Revenue Department**

**Contract No.: IR/PAM/28/123/2023**

1. "Maintenance of Perimeter and Inner Firewalls at Inland Revenue Department" என்பதற்காக தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் (உயர் மட்டம்) தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதியைப் பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - அ. விலைமனுக்களை சமர்ப்பிக்கும் வேளையிலும் ஒப்பந்தத்தை வழங்கும் வேளையிலும் அபகீர்த்தியானோர் பட்டியலிடப்பட்ட ஒப்பந்தக்காரராக இல்லாமலிருந்திருத்தல் வேண்டுமென்பதுடன் இது தொடர்பாக சத்தியக்கடதாசியொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
   - ஆ. இலங்கையில் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள வியாபார பதிவை வழங்கல் வேண்டும்.
   - இ. அரசாங்க திணைக்களங்கள்/நிறுவனங்கள் அல்லது சிறந்த புகழ்வாய்ந்த தனியார் கம்பனிகளில் இந்த ஆவணத்தில் பட்டியலிடப்பட்ட நிகரான வன்பொருள் அம்சங்களை பராமரிப்பதில் ஆகக் குறைந்தது 05 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. 2022.12.13 ஆம் திகதியிலிருந்து 2022.12.26 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக பன்னிரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவை (12,500 ரூபா) செலுத்திய பின்னர், கொழும்பு-02, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்தில் மாத்திரமே இருத்தல் வேண்டும்.
5. 2022.12.27 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்), பெறுகை மற்றும் ஆதனங்கள் முகாமைத்துவ கிளை, 15 ஆம் மாடி, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு-02 என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.
6. விலைமனுக்கள் 2023.03.27 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களும் ஆறு இலட்சம் இலங்கை ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்டதும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட படிவத்திலும் வங்கி உத்தரவாத பாங்கிலமைந்துள்ளதுமான விலைமனுப்பிணையொன்றுடன் இருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2023.04.27 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),**
**பெறுகை மற்றும் ஆதனங்கள் முகாமைத்துவ கிளை,**
**15 ஆம் மாடி, உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,**
**ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு-02.**

**திகதி: 2022.12.13 ஆம் நாளன்று.**

---

# NOTICE

## UNIVERSITY OF VAVUNIYA, SRI LANKA

### VACANCY FOR THE POST OF TEMPORARY POSITIONS

### WALK-IN-INTERVIEW

Walk-in-interviews for the following posts will be held on 20th December 2022 at the Board Room of the University of Vavuniya, Pambaimadu.

**Faculty of Business Studies**

1. Temporary Assistant Lecturer in Marketing Management 9.00 am
2. Temporary Instructor in Computer Technology 10.00 am

**Faculty of Applied Science**

1. Temporary Demonstrator in Information Technology 10.30 am

**Faculty of Technological Studies**

1. Temporary Assistant Lecturer in ICT 1.00 pm
2. Temporary Demonstrator in ICT 2.00 pm

Applicants who are interested in the above posts are requested to visit the University Website **http://www.vau.ac.lk** to obtain further details.

**Registrar**
**University of Vavuniya**
12.12.2022

---

# வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| 302 -1XXX | MAZDA | FAMILIA BHA3 | 1997 |
| KE -8XXX | MARUTI | 800 | 2007 |
| KT -7XXX | MARUTI | ALTO K10 | 2012 |
| **கெப்** | | | |
| PD -1XXX | TOYOTA | HILUX VIGO | 2006 |
| **வேன்** | | | |
| 056 -3XXX | TOYOTA | HIACE LH51V | 1989 |
| **லொறி** | | | |
| PS -7XXX | MAHENDRA | MAXXIMO | 2012 |
| PU -5XXX | DFSK | EQ1020DR | 2012 |
| PW -8XXX | MAHINDRA | MAXXIMO PLUS | 2013 |
| DAB -5XXX | TATA | SUPER ACE | 2015 |
| DAF -7XXX | SUZUKI | SUPER CARRY | 2016 |
| DAH -5XXX | TATA | ACE HT2 | 2019 |
| **டிப்பர்** | | | |
| 226 -3XXX | LANKA ASHOK LEYLAND | - | 1999 |
| LL -6XXX | ISUZU | KR-NKR81ED | 2003 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| HH -7XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2003 |
| QA -3XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| JV -8XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QD -6XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QJ -8XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QG -3XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QE -3XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QK -1XXX | BAJAJ | AUTO AR4S | 2007 |
| QK -1XXX | BAJAJ | AUTO AR4S | 2007 |
| QU -5XXX | BAJAJ | BAJAJ 4S | 2009 |
| QT -3XXX | BAJAJ | BAJAJ 4 S | 2009 |
| YB -5XXX | BAJAJ | AR4S-UG | 2010 |
| YH -3XXX | BAJAJ | RE 205 | 2010 |
| YR -5XXX | PIAGGIOAPE | | 2011 |
| YZ -5XXX | BAJAJ | RE205 | 2012 |
| AAG -8XXX | BAJAJ | RE 205 | 2012 |
| AAH -9XXX | BAJAJ | RE 205 | 2013 |
| ABB -8XXX | PIAGGIOAPE | | 2015 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

**மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2022 டிசம்பர் 13ஆம், 14ஆம், 15ஆம், மற்றும் 16ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2022 டிசம்பர் 16ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)**

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

**இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.**

**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி**

Mercantile Investments and Finance PLC

**தலைமை அலுவலகம்**
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: **2343720 - 7** நீட்சி: **210**

தொடர்பு:
**ஜானக்க - 071 1624559 / மொதித - 071 9530350**

www.skillsads.com

---

**அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்**
**வன சீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு**

# வெற்றிடங்கள்

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தில் வெற்றிடமாக நிலவும் பின்வரும் பதவிகளுக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 1. "சிரேஷ்ட முகாமையாளர்" சேவை வகுதி – (HM)

**சம்பள அளவு:** HM 1-2 ரூபா (81,670 – 2,270x15 – 115,720)

**1.1 பதவி - பிரதிப் பொது முகாமையாளர் (பொறியியல் மற்றும் உற்பத்தி) (HM 1-2)**

**தகைமைகள்:** (பின்வரும் I அல்லது II)

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் / வர்த்தகம் / வியாபார நிர்வாகம் / முகாமைத்துவம் / விஞ்ஞானம் / விவசாயம் அல்லது துறைக்கு இயைபான வேறு பட்டம்

**அத்துடன்**

இயைபுடைய துறையில் பட்டப் பின்படிப்புப் பட்டத்தைப் (Masters') பெற்றிருத்தல் அல்லது பதவிக்கு இயைபான விடயத்துறைக்குப் பொருத்தமான, அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தின் இணை அங்கத்துவத்தைப் (Associate Membership) பெற்றிருத்தல் வேண்டும்.

**மற்றும்**

அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனத்தில் ''முகாமைத்துவ மட்டப்'' பதவியில் குறைந்தபட்சம் 15 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

II. பதவிக்கு இயைபான விடயத்துறைக்குப் பொருத்தமான, அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**மற்றும்**

அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனத்தில் ''முகாமைத்துவ மட்டப்'' பதவியில் குறைந்தபட்சம் 15 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**1.2 பதவி - பிரதிப் பொது முகாமையாளர் (செயற்பாடுகள்) (HM 1-2)**

**தகைமைகள்:**

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானம் / விவசாயம் / வியாபார நிர்வாகம் / முகாமைத்துவம் அல்லது வர்த்தகத் துறைக்கு இயைபான பட்டம்

**அத்துடன்**

இயைபுடைய துறையில் பட்டப் பின்படிப்புப் பட்டத்தைப் (Masters') பெற்றிருத்தல் அல்லது பதவிக்கு இயைபான விடயத்துறைக்குப் பொருத்தமான, அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தின் இணை அங்கத்துவத்தைப் (Associate Membership) பெற்றிருத்தல் வேண்டும்.

**மற்றும்**

அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனத்தில் ''முகாமைத்துவ மட்டப்'' பதவியில் குறைந்தபட்சம் 15 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**1.3 பதவி - பிரதிப் பொது முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வு) (HM 1-2)**

**தகைமைகள்:** (பின்வரும் I அல்லது II)

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி/ கணக்கியல்/ வர்த்தகம்/ வியாபார நிர்வாகம்/ முகாமைத்துவம்/ விஞ்ஞானம்/ விவசாயம் அல்லது துறைக்கு இயைபான வேறு பட்டம்

**அத்துடன்**

இயைபுடைய துறையில் பட்டப் பின்படிப்புப் பட்டத்தைப் (Masters') பெற்றிருத்தல் அல்லது பதவிக்கு இயைபான விடயத்துறைக்குப் பொருத்தமான, அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தின் இணை அங்கத்துவத்தைப் (Associate Membership) பெற்றிருத்தல் வேண்டும்.

**மற்றும்**

அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனத்தில் ''முகாமைத்துவ மட்டப்'' பதவியில் குறைந்தபட்சம் 15 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

II. பதவிக்கு இயைபான விடயத்துறைக்குப் பொருத்தமான, அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**மற்றும்**

அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனத்தில் ''முகாமைத்துவ மட்டப்'' பதவியில் குறைந்தபட்சம் 15 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

## 2. "முகாமையாளர்" சேவை வகுதி - (MM)

**சம்பள அளவு:** MM 1-1 ரூபா (53,175 - 10x1,375 - 15x1,910 - 95,575)

**2.1 பதவி - பிரதி முகாமையாளர் (நிதி) (MM 1-1)**

**தகைமைகள்:** (பின்வரும் I அல்லது II)

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி / கணக்கியல்/ வர்த்தகம் அல்லது துறைக்கு இயைபான வேறு பட்டம்

**அத்துடன்**

ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் பதவிக்கு இயைபான துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருட (01) அனுபவத்தைப் பெற்றிருத்தல்

II. இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (ICASL) இடைநிலை மட்டத் தகைமை / பட்டய முகாமைத்துவ கணக்காளர்களின் (CIMA) இடைநிலை மட்டத் தகைமை /இலங்கை சான்றுபடுத்திய முகாமைத்துவக் கணக்காளர்களின் (CMA) இடைநிலை மட்டத் தகைமை / பட்டய சான்றுபடுத்திய கணக்காளர்களின் சங்கத்தின் (ACCA) இடைநிலை மட்டத் தகைமை / உயர் தேசிய கணக்காளர் டிப்ளோமாவைப் (HNDA) பெற்றிருத்தல்.

**அத்துடன்**

குறித்த தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பதவிக்கு இயைபான விடயத்துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருட (01) அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**2.2 பதவி - முகாமையாளர்/ பிரதி முகாமையாளர் (ஆராய்ச்சி மற்றும் பயிற்சி) (MM 1-1)**

**தகைமைகள்:**

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானம் / பௌதிகம் / விவசாயம் / வியாபார நிர்வாகம் தொடர்பான பட்டம்

**அத்துடன்**

ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் பதவிக்கு இயைபான துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருட (01) அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**2.3 பதவி - முகாமையாளர் / பிரதி முகாமையாளர் (மரங்களை பதப்படுத்துதல் மற்றும் பேணுதல்) (MM 1-1)**

**தகைமைகள்:**

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானம் / பௌதீகம் / விவசாயம் / முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் தொடர்பான பட்டம்

**அத்துடன்**

ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் பதவிக்கு இயைபான துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருட (01) அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**2.4 பதவி - முகாமையாளர் / பிரதி முகாமையாளர் (சிவில் பொறியியல்) (MM 1-1)**

**தகைமைகள்:** (பின்வரும் I அல்லது II)

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியல் தொடர்பான பட்டம்

**அத்துடன்**

ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் பதவிக்கு இயைபான துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருட (01) அனுபவத்தைப் பெற்றிருத்தல்

II. துறைக்கு இயைபான மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்திறன் (NVQ) ஏழாம் (07) மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

குறித்த தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனத்தில் விடயத்திற்கு இயைபான துறையில் குறைந்தபட்சம் (01) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**2.5 பதவி - முகாமையாளர் / பிரதி முகாமையாளர் (மனித வளங்கள்) (MM 1-1)**

**தகைமைகள்:**

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனிதவள முகாமைத்துவம் / அரச முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் தொடர்பான பட்டம்

**அத்துடன்**

ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் பதவிக்கு இயைபான துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருட (01) அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**2.6 பதவி - முகாமையாளர் / பிரதி முகாமையாளர் (நிர்வாகம்) (MM 1-1)**

**தகைமைகள்:**

வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனிதவள முகாமைத்துவம் / அரச முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் / வியாபார முகாமைத்துவம் தொடர்பான பட்டம்

**அத்துடன்**

ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் பதவிக்கு இயைபான துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருட (01) அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**ஏனைய அனுகூலங்கள்:**

ஊழியர் மற்றும் அவரைச் சார்ந்துள்ளவர்களுக்கான மருத்துவக் காப்புறுதி
வருடாந்த போனஸ்
வருகைக் கொடுப்பனவு
வீட்டுக் கடன் மற்றும் ஏனைய கடன் வசதிகள்
ஊ.சே.லா.நி மற்றும் ஊ.ந.நிதிகளுக்கான பங்களிப்பு

விண்ணப்பதாரரினால் முழுமையான விபரங்களை உள்ளடக்கிய தமது விண்ணப்பங்களை உறவினரல்லாத இருவரின் தகவல்கள் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகள் சகிதம் 2022-12-29ஆம் திகதிக்கு முன் பதிவுத் தபாலில் தலைவர், அரசாங்க மரக் கூட்டுத்தாபனம், இல. 82, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். முழுமையற்ற மற்றும் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் அறிவிக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும்.

தற்போது தேசிய / மாகாண அரச சேவை அல்லது கூட்டுத்தாபனம் அல்லது நியாயாதிக்க நிறுவனங்களில் சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை இயைபுடைய நிறுவனத்தின் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும். தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்விற்காக அழைக்கப்படுவர்.

**தலைவர் - அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்**

# உலகக் கிண்ண கால்பந்து தொடர்: அரையிறுதிப் போட்டிகள் ஆரம்பம்

உலகக் கிண்ண கால்பந்து தொடரின் இறுதிப் போட்டிக்கு தெரிவாகும் அணிகளை தீர்மானிக்கும் அரையிறுதிப் போட்டிகள் இலங்கை நேரப்படி நாளை (14) அதிகாலை 12.30க்கு ஆரம்பமாகவுள்ளது.

இதன் முதல் அரையிறுதிப் போட்டியில் ஆர்ஜன்டீனா மற்றும் குரோசிய அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. புதன்கிழமை அதிகாலை நடைபெறும் இந்தப் போட்டியில் தொடர்ந்து இரண்டாவது முறை உலகக் கிண்ண இறுதிப் போட்டிக்கு முன்னேறும் எதிர்பார்ப்புடன் குரோசியா களமிறங்குவதோடு 2014க்கு பின் இறுதிப் போட்டிக்கு முன்னேறும் எதிர்பார்ப்புடன் ஆர்ஜன்டீனா களமிறங்குகிறது.

காலிறுதிப் போட்டியில் பிரேசில் அணியை பெனால்டி சூட் அவுட் முறையில் வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறிய குரோசிய அணியின் பலம் அதன் தற்காப்பு ஆட்டத்தில் உள்ளது. அந்த அணி நொக் அவுட் சுற்றிலும் ஜப்பானுக்கு எதிராக பெனால்டி சூட் அவுட் முறையிலேயே வெற்றியீட்டியது.




ஆர்ஜன்டீன அணி உலகக் கிண்ண அரையிறுதியில் இதுவரை தோற்றதில்லை. அந்த அணி ஐந்து முறை அரையிறுதிக்கு முன்னேறிய நிலையில் இரண்டு தடவை உலகக் கிண்ணத்தை வென்றதோடு மூன்று தடவைகள் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

நட்சத்திர வீரர் லியோனல் மெஸ்ஸிக்கு இது கடைசி உலகக் கிண்ணம் என்பதால் கிண்ணத்தைக் கைப்பற்ற அவர் முழு திறமையுடன் போராடுவார். இதனிடையே நடப்புச் சம்பியன் பிரான்ஸ், இம்முறை உலகக் கிண்ணத்தில் பெரும் அதிர்ச்சி தந்த மொரோக்கோ அணியை வியாழக்கிழமை (15) அதிகாலை நடைபெறும் அரையிறுதியில் சந்திக்கவுள்ளது.

பிரான்ஸ் உலகக் கிண்ண கால்பந்து வரலாற்றில் பிரேசிலுக்கு அடுத்து 60 ஆண்டுகளின் பின் அடுத்தடுத்து இரண்டாவது முறை உலகக் கிண்ணத்தை வெல்லும் எதிர்பார்ப்போடு உள்ளது. இந்த உலகக் கிண்ணத்தில் தோய்வின்றி ஆடும் வலுவான அணியாக பிரான்ஸ் செயற்பட்டு வருகிறது.

எனினும் ஆபிரிக்காவின் முதல் அணியாக உலகக் கிண்ண அரையிறுதிக்கு முன்னேறி இருக்கும் மொரோக்கோ, ஆரம்ப சுற்றில் பெல்ஜியம், நொக் அவுட்டில் ஸ்பெயின் தொடர்ந்து காலிறுதியில் போர்த்துக்கல் அணிகளை வீழ்த்தி அதிர்ச்சி கொடுத்த நிலையில் மற்றொரு அதிர்ச்சி வெற்றியை எதிர்பார்த்து களமிறங்கவுள்ளது.

## பந்து மாற்றம்



உலகக் கிண்ண கால்பந்துத் தொடரின் இறுதிக் கட்ட போட்டிகளுக்கு புதிய வகை பந்து பயன்படுத்தப்படவுள்ளதை சர்வதேச கால்பந்து சம்மேளனம் (பிஃபா) உறுதி செய்துள்ளது.

இதுவரை பயன்படுத்தப்பட்ட அல் ரிஹ்லா பந்துக்கு பதில் எதிர்வரும் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகளுக்கு அடிடாசின் அல் ஹில்ம் பந்து பயன்படுத்தப்படும் என்று பிஃபா அறிவித்துள்ளது. அரபு மொழியில் அல் ஹில்ம் என்றால் "கனவு" என்பதோடு அல் ரிஹ்லா என்பது "பயணம்" ஆகும்.

இம்முறை உலகக் கிண்ணத்தில் பயன்படுத்தப்படும் பந்து நடுவரின் முடிவுக்கு உதவும் வகையிலான தொழில்நுட்பத்தைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பந்து குழுநிலை, நொக் அவுட் மற்றும் காலிறுதிப் போட்டிகளில் பயன்படுத்தப்பட்டன.

இந்நிலையில் பயன்படுத்தப்படவுள்ள அல் ஹில்ம் பந்து போட்டியை நடத்தும் காட்டாரின் பாலைவன சூழலை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தங்க நிறம் சார்ந்து முக்கோண வடிவமைப்பில் தயாரிக்கப்பட்டுள்ளது.

## தசுனுக்கு அபராதம்




நடுவரின் தீர்ப்புக்கு அதிருப்தி வெளியிட்ட தம்புள்ள அவ்ரா அணித் தலைவர் தசுன் ஷானக்கவுக்கு 11 இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இது அவரது போட்டிக் கட்டணத்தின் 40 வீதமாகும்.

ஹம்பாந்தோட்டையில் கடந்த டிசம்பர் 8ஆம் திகதி நடைபெற்ற கொழும்பு ஸ்டார் அணிக்கு எதிரான லங்கா பிரீமியர் லீக் போட்டியின்போதே அவர் ஒழுக்க மீறலில் ஈடுபட்டுள்ளார்.

இந்தத் தவறை தசுன் ஷானக்க ஒப்புக் கொண்டதை அடுத்தே இந்த அபராதம் விதிக்கப்பட்டிருப்பதோடு 2 தரக்குறைப்பு புள்ளிகளும் வழங்கப்பட்டுள்ளன.

## நீச்சல் சம்பியன்சிப் போட்டி: ஜோசப், விசாக்கா வெற்றி






கொழும்பு சுகததாச நீச்சல் தடாக வளாகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (11) நிறைவடைந்த 47ஆவது இலங்கை பாடசாலைகள் நீச்சல் சம்பியன்சிக் போட்டியில் கொழும்பு, புனித ஜோசப் கல்லூரி ஆண்கள் பிரிவிலும், கொழும்பு விசாக்கா கல்லூரி பெண்கள் பிரிவிலும் சம்பியன்களாக தெரிவாகின.

இதன்போது புனித ஜோசப் கல்லூரி மொத்த 613 புள்ளிகளைப் பெற்ற நிலையில் புனித பேதுரு கல்லூரி (402) இரண்டாவது இடத்தையும் ஆனந்த கல்லூரி (300) மூன்றாம் இடத்தையும் பெற்றன. புனித ஜோசப் தொடர்ச்சியாக 17ஆவது தடவையே சம்பியனாகியுள்ளது.

மறுபுறம் பெண்கள் பிரிவில் விசாக்கா கல்லூரி 475 புள்ளிகளை பெற்று முதலிடத்தை பிடித்த நிலையில் கொழும்பு மகளிர் கல்லூரி இரண்டாம் இடத்தையும் வத்தளை லைசியம் மூன்றாம் இடத்தையும் பிடித்தன.

Nestlé MILO

## அமானா வங்கி வெற்றி



**அட்டாளைச்சேனை மத்திய நிருபர்**

கல்முனை சட்டத்தரணிகள் சங்க அணிக்கு எதிரான சினேகபூர்வ கிரிக்கெட் போட்டியில், அக்கரைப்பற்று அமானா வங்கி அணி 10 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

கல்முனை சந்தாங்கேணி ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற 12 ஓவர்கள் நிர்ணயிக்கப்பட்ட இந்தப் போட்டியில் 92 ஓட்ட வெற்றி இலக்கை நோக்கி பதிலெடுத்தாடிய அமானா வங்கி அணி ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து இலக்கை எட்டியது. அதிகபட்சமாக றியாஸ் 62 ஓட்டங்களை பெற்றார்.

## ஜப்னா அணிக்கு சாதனை வெற்றி

லங்கா பிரீமியர் லீக் தொடரில் சாதனை ஓட்டங்களை பெற்ற ஜப்னா கிங்ஸ் அணி தம்புள்ள அவ்ரா அணிக்கு எதிரான போட்டியில் 51 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

பல்லேகலவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட ஜப்னா கிங்ஸ் 20 ஓவர்களுக்கும் 4 விக்கெட்டுகளை இழந்து 240 ஓட்டங்களை விளாசியது. இது இந்தத் தொடரில் அதிகபட்ச ஓட்டங்களாக இருந்தது.

ரஹ்மானுல்லா குர்பாஸ் 35 பந்துகளில் 73 ஓட்டங்களை விளாசியதோடு அவிஷ்க பெர்னாண்டோ 30 பந்துகளில் 54 ஓட்டங்களை பெற்றார். எனினும் தம்புள்ள அணியால் 8 விக்கெட்டுகளை இழந்து 189 ஓட்டங்களையே பெற முடிந்தது.



## உடல் கட்டழகர் போட்டியில் உதயவுக்கு 03 வெற்றிகள்



பாணந்துறை ஸ்ரீ சுமங்கல கல்லூரியில் நடைபெற்ற மிஸ்டர் களுத்துறை உடல் கட்டழகர் மற்றும் உடற்தகுதி சம்பியன்சிப் போட்டியில் 75 கிலோகிராம் எடைப் பிரிவில் லேக் ஹவுஸ் நிறுவனத்தின் கணக்குப் பிரிவில் பணியாற்றும் எல்.பீ.ஐ. உதய முதலிடத்தை வெற்றுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (11) இடம்பெற்ற இந்த போட்டியின் ஒட்டுமொத்த தொடருக்கான இரண்டாம் இடத்தையும் வென்ற அவர் ஆடவர் உடற்தகுதி திறந்த போட்டியில் நான்காம் இடத்தை பெற்றார். உடல் கட்டழகர் போட்டியில் இதற்கு முன் பல வெற்றிகளைப் பெற்றபோதும் அவர் ஒரே போட்டித் தொடரில் மூன்று வெற்றிகளைப் பெறுவது இது முதல் முறையாகும். ஆண் கட்டழகர் போட்டியில் லேக் ஹவுஸ் ஊழியர் ஒருவரின் சிறந்த வெற்றியாக இது உள்ளது.

இலங்கை உடல் கட்டழகர் மற்றும் உடற்தகுதி சம்மேளனத்தின் மேற்பார்வையில் பாணந்துறை, பவர் ஹவுஸ் ஜிம் இந்தப் போட்டியை ஏற்பாடு செய்திருந்தது.

## இங்கிலாந்து தொடர் வெற்றி



பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் 26 ஓட்டங்களால் வெற்றியீட்டில இங்கிலாந்து அணி 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை 2–0 என கைப்பற்றியது.

2005க்கு பின்னர் இங்கிலாந்து பாக். மண்ணில் ஆடும் முதல் டெஸ்ட் தொடராக இது இருப்பதோடு பிரிட்டனுக்கு வெளியில் பாக். அணிக்கு எதிராக இங்கிலாந்து 22 ஆண்டுகளில் பெறும் முதல் தொடர் வெற்றி இதுவாகும்.

முல்தானில் நடைபெற்ற இந்த டெஸ்ட் போட்டியின் நான்காவது நாளான நேற்று 355 ஓட்ட வெற்றி இலக்கை நோக்கி தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த பாகிஸ்தான் அணி 328 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

# சர்வதேச செய்திகள்

## 2ஆவது ஆர்ப்பாட்டக்காரருக்கும் தூக்கு



ஈரானின் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துடன் தொடர்புபட்டு இரண்டாவது நபர் ஒருவர் மீது மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாக அந்நாடு குறிப்பிட்டுள்ளது.

மாஜித்ரேசா ரெஹ்னவர்த் என்பவர் நேற்று (12) காலை பொது இடத்தில் தூக்கிலிடப்பட்டார் என்று நீதித்துறை அறிவித்துள்ளது.

ஈரானிய துணைப்படை உறுப்பினர்கள் இருவரை கத்தியால் குத்தி கொலை செய்தது டன் தொடர்புபட்டு அவர் நீதிமன்றத்தில் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டுள்ளார்.

எனினும் முறையான நடைமுறை இல்லாத வழக்கு விசாரணை மூலம் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது மரண தண்டனை விதிக்கப்படுவதாக மனித உரிமைக் குழுக்கள் எச்சரித்துள்ளன.

முன்னதாக கடந்த வியாழக்கிழமை 23 வயதான மாஹசன் ஷெகாரி தூக்கிலிடப்பட்டார். துணைப்படை வீரர்கள் மீது கத்தியால் தாக்குதல் நடத்தியதாக அவர் குற்றங்காணப்பட்டார்.

முறையற்ற வகையில் ஹிஜாப் அணிந்த குற்றச்சாட்டில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட 22 வயது மஹசா அமினி என்ற பெண் மரணித்த சம்பவத்தைத் தொடர்ந்தே ஈரானில் ஆர்ப்பாட்டம் வெடித்தது.

## அமெ. கொவிட் நிதி திருட்டு



அமெரிக்காவின் கொவிட் நிவாரண நிதியில் சுமார் 20 மில்லியன் டொலர்களை இணைய திருடர்கள் திருடியுள்ளனர் என்று அமெரிக்க இரகசிய சேவை தெரிவித்துள்ளது.

செங்டுவை தளமாகக் கொண்ட ஏ.பி.டி 41 என்ற குழுவினர் இம்மோசடியை மேற்கொண்டிருக்கலாம் என்று இரகசிய சேவையின் தேசிய பெருந்தொற்று மோசடி மீட்புக்கான ஒருங்கிணைப்பாளர் ரோய் டொட்சன் தெரிவித்துள்ளார். பொது மக்கள் நன்மை பெறும் திட்டங்களை மோசடி செய்யும் உள்நாட்டு வெளிநாட்டு மோசடிக்காரர்கள் தொடர்பில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 டிசம்பர் மாதம் 13ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.